Registered as a news paper. பக்கங்கள்: பத்து விலை: ரூபா 6.00

நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

மலர் : 01 திருவள்ளுவர் ஆண்டு: 2034 ஆடி 32 ஆம் நாள், ஹிஜ்ரி 1425 ஐ.ஆகீர் 18 (17.08.2003) ஞாயிற்றுக்கிழமை இதழ்: 317

மொறாயஸ் ஒளிச்சுடர்
பல், மூக்குக் கண்ணாடியகம்
இல.05 பலாலி வீதி (அப்பலோ கிளினிக் முன்), யாழ்.
※ பல் கட்டுவதற்கும்,
※ பற்களுக்கு கிளிப் போடுவதற்கும்,
※ இலவச கண் பரிசோதனை செய்து, நவீன ரக பிறேம்களில் மூக்குக் கண்ணாடிகளைப் பெறவும்.
(1962 முதல் யாழ்.வெலிங்டன் திரையரங்கு முன்பாக இயங்கியது)
(சி-976)

# விடுதலைப் புலிகள் தரப்பின் யோசனைகள்

# அடுத்தமாத இறுதிக்குள் அரசிடம் கையளிப்பு

## பி.பி.சி பேட்டியில் தமிழ்ச்செல்வன்



(கிளிநொச்சி)

**அடுத்தவாரம் பாரிஸில் ஆரம்பமாகும் இடைக்கால நிர்வாக யோசனை பற்றிய கலந்துரையாடல்கள் பத்துநாட்கள்வரை நீடிக்கும் என்றும் - இக்கலந்துரையாடலில் எடுக்கப்படும் தீர்மானங்களைத் தலைமைப்பீடம் ஆராய்ந்து, திருத்தங்களைச்செய்த பின்னர், திருத்தயோசனை அடுத்தமாத இறுதிக்குள் அரசுக்கு அனுப்பிவைக்கப்படும் என அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் தெரிவித்தார்.**

**பி.பி.சி தமிழோசைக்கு அவர் வழங்கிய பேட்டியில் மேலும் தெரிவித்ததாவது -**

எங்களைப் பொறுத்தவரை சண்டையை நிறுத்துவது மட்டுமல்ல, யுத்தத்தினால் மக்களுக்கு ஏற்பட்டுள்ள - பாதிப்புக்கள், இழப்புக்கள், நெருக்கடியான வாழ்க்கை இவைகளெல்லாம் நீக்கப்பட்டு, ஒரு இயல்பு நிலை ஏற்பட்ட பின்பு தான், அடுத்த கட்டத்தை நோக்கிப்,போகலாம் என்பது யதார்த்தமாகும்.

அந்த அடிப்படையில்தான் - அரச தரப்பும், படைத்தரப்பும் எங்களுக்கு முழுமையாக ஒத்துழைப்பு வழங்கல், வாக்குறுதியளிக்கப்பட்ட விடயங்களை நடைமுறைப்படுத்தல், மக்களின் நம்பிக்கைகளைக் கட்டியெழுப்புவது போன்ற விடயங்களில் அரசாங்கத்தரப்பில் தவறு இழைக்கப்பட்டது.

நாங்கள் எங்களுடைய மக்களுக்கு பதில் சொல்லவேண்டியவர்

(10 ஆம் பக்கம் பார்க்க)

மடுத் திருவிழாவுக்குச் சென்றுதிரும்பிய

## ஐயாயிரத்துக்கும் மேற்பட்ட மக்களை முகமாலையில் படையினர் திருப்பினர்

(வவுனியா)

மடுத் தேவாலயத் திருவிழாவில் கலந்துகொண்டுவிட்டு - யாழ்ப்பாணத்திற்குத் திரும்பிய மக்களில் ஐயாயிரத்துக்கு மேற்பட்டோர், நேற்று மாலை முகமாலைச் சோதனைச்சாவடியில் வைத்துப் படையினரால் திருப்பியனுப்பப்பட்டனர்.

படையினரின் நேரக்கட்டுப்பாடு காரணமாகவே இவர்கள் திருப்பியனுப்பப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, இவ்வருடத் திருவிழாவில் பல்லாயிரக்கணக்கான யாழ்ப்பாண மக்கள் கலந்துகொண்டதாகத் தெரியவருகின்றது.

## பருத்தித்துறை - கொடிகாமம் வீதியில் படையினர் திடீர் சோதனை நடவடிக்கை

(வடமராட்சி)

பருத்தித்துறை - கொடிகாமம் வீதியிலுள்ள முள்ளி இராணுவச் சோதனைச் சாவடியில் படையினரும், பொலிஸாரும் நேற்றுமாலை திடீரென சோதனை நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

இச்சம்பவம் பற்றி மேலும் தெரியவருவதாவது, நேற்றுமாலை நான்கு மணி தொடக்கம் ஆறு மணிவரை சோதனை நடவடிக்கையினை மேற்கொண்ட படையினரும், பொலிஸாரும், பஸ்ஸில் வந்த பயணிகளை கீழே இறக்கிச் சோதனையிட்டனர். அத்துடன், பொதுமக்களை படையினர் பதிவுசெய்தனர்.

இதேவேளை, பருத்தித்துறை - கொடிகாமம் வீதியில் நேற்றைய தினம் ரோந்து நடவடிக்கைகளும் அதிகரித்துக் காணப்பட்டது.

## புனர்நிர்மாண உதவிகளை வழங்குவது குறித்து தமிழ்ச்செல்வனுடன் தாய்லாந்து தூதுவர் பேச்சு!

(கிளிநொச்சி)

தமிழீழ அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனை தாய்லாந்து தூதுவர் சந்தித்து - தமிழர் தாயக புனர்நிர்மாணத்துக்கு உதவிகள் வழங்குவது குறித்து, கலந்துரையாடியுள்ளார்.

நேற்று கிளிநொச்சிக்கு வருகை தந்த தாய்லாந்துத் தூதுவர் - ஜேமரிவான் ஜனூன் மற்றும் தாய்லாந்து பொருளாதார திட்ட அதிகாரிகள் - தமிழீழ அரிசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனுடன் இரண்டு மணிநேரம் கலந்துரையாடலை நடத்தினர்.

நண்பகல் 12 மணிமுதல் பிற்பகல் 2 மணிவரை இந்தக் கலந்துரையாடல் இடம்பெற்றது.

தமிழீழ அரசியற்துறைப் பொறுப்பாளருடன் தாம் மேற்கொள்ளும் இரண்டாவது சந்திப்பு இதுவென, தாய்லாந்துத் தூதுவர் ரிவான் ஜனூன் தெரிவித்தார்.

இந்த ஆண்டும், அடுத்த ஆண்டும் - இலங்கையில் மேற்கொள்ளும் உதவிகளில், தமிழர் பகுதிகளில் இடம்பெறவுள்ள புனர்நிர்மாணப் பணிகளுக்கான உதவிகள் பற்றி, தாய்லாந்து தூதுக்குழுவினர்

(10 ஆம் பக்கம் பார்க்க)

### விண்ணாணம் விநாசியர்



இதுதான் சரியான வழி பாருங்கோ...



யாழ்ப்பாணத்திற்கு நேற்று வருகைதந்த காணிஅமைச்சர் ராஜித சேனாரத்ன மற்றும் இராணுவ, பொலிஸ் அதிகாரிகள் யாழ்.பொலிஸ்நிலைய கட்டடத்தைப் பார்வையிடுதைப் படத்தில் காணலாம்.

## மாணவி மீது அங்கசேஷ்டை புரிந்த இளைஞர் நையப்புடைக்கப்பட்டார்

(நல்லூர்)

யாழ்.இந்துமகளிர் கல்லூரிக்கு அண்மையிலுள்ள ஒழுங்கையில், பாடசாலை மாணவி மீது அங்கசேஷ்டைபுரிந்த இளைஞர் ஒருவர் - நேற்று மதியம் பொதுமக்களால் நையப்புடைக்கப்பட்டு, கலாசாரத்தைப் பேணும் இளைஞர் குழுவிடம் ஒப்டைக்கப்பட்டார்.

இச்சம்பவம் பற்றி மேலும் தெரியவருவதாவது, தனிமையில் சென்ற மாணவியை மேற்படி ஒழுங்கையில் வைத்து வழிமறித்த பிரஸ்தாப இளைஞன் - மாணவியிடம் அங்கசேஷ்டை புரிய (10 ஆம் பக்கம் பார்க்க)

## மூதூரில் பொதுமக்கள் மீது படையினர் துப்பாக்கிச் சூடு!

### ஆறு முஸ்லிம் பொதுமக்கள் காயம்

(திருகோணமலை)

திருகோணமலை - மூதூர் பிரதேசத்தில் இராணுவத்தினர் சுட்டதில் ஆறு முஸ்லிம் பொதுமக்கள் காயமடைந்தனர்.

கடந்த புதன்கிழமை இரு முஸ்லிம் இளைஞர்கள் இனந்தெரியாதோரால் சுட்டுக்கொல்லப்பட்டதன் பின்னர் - திருகோணமலையிலிருந்து மூதூருக்கான பஸ்சேவை பாதுகாப்புக் காரணங்களை முன்னிட்டு நடைபெறவில்லை.

மீளவும் - நேற்றுக் காலை பதினொரு மணிக்கு இராணுவத்தினரும், பொலிஸாரும் பாதுகாப்பு வழங்க - மூதூருக்கான பஸ்சேவை ஆரம்பிக்கப்பட்டது. இந்த பஸ், மூதூர் 58 ஆம் கட்டையை நெருங்கிய வேளை முஸ்லிம் இளைஞர்களின் கல்லெறிக்கு இலக்கானது. இதையடுத்து படையினர் அவர்களை கல்லெறியவேண்டாம் எனக்கேட்ட போதும், தொடர்ந்தும் கல்லெ

(10 ஆம் பக்கம் பார்க்க)

## கூட்டுறவு தின விழாவில் புலிக்கொடி; கண்காணிப்புக்குழுவினர் விசாரணை!

(நல்லூர்)

சர்வதேச கூட்டுறவு தினவிழாவில் புலிக்கொடி ஏற்றியது தொடர்பாக - யாழ். மாவட்ட யுத்தநிறுத்தக் கண்காணிப்புக்குழுவினர், கூட்டுறவுச் சபைச் செயலாளரிடம் நேற்று விசாரணை நடத்தினர்.

சர்வதேச கூட்டுறவாளர் தின விழா நேற்றுக்காலை ஆரம்பமான போது, கூட்டுறவாளர் கொடியும், புலிக்கொடியும் ஏற்றப்பட்டது. எனினும் விழா முடிவடையும் நேரமான நண்பகல் இரண்டு மணியளவில் வீரசிங்கம் மண்டபத்

(10 ஆம் பக்கம் பார்க்க)

EXPOAIR
your friend in the skies...
இலங்கையில் முன்னணி வகிக்கும் உள்ளூர் விமான சேவை....
ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள் 021 ~ 2223891 2226297
0712348888 0712349999 074512666 01360290 01360291
email . jaffna @ expoavi . com.
(சி -1139)
எக்ஸ்போஎயார்
வான் வெளியில் உங்கள் தோழன்...

# பல்கலைக்கழக ஊழியர்களின் வேலைநிறுத்தம் விஸ்தரிக்கப்படும்

(யாழ்ப்பாணம்)

பல்கலைக்கழக ஊழியர்களின் வேலைநிறுத்தம் விஸ்தரிக்கப்பட வுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பாக ஊழியர்கள், துணை வேந்தர் மட்டத்திலான சந்திப்பு ஒன்றினை நடத்தவுள்ளனர்.

பல்கலைக்கழக மாணவர் விடுதிகள் மூடப்படவிருப்பதாகவும், தண்ணீர் விநியோகம் நிறுத்தப்படவிருப்பதாக தெரியவருகின்றது.

பல்கலைக்கழகத்தினை மூடுவது தொடர்பாக ஆலோசித்து வருவதாகவும் தெரிகின்றது.

பாதுகாப்பு கடமைகளில் ஈடுபட்டு வரும் ஊழியர்கள், தமது பாதுகாப்பை விலக்கிக்கொள்ளவிருப்பதாகவும் தெரியவருகின்றது. (ந)

# இங்கிலாந்துக்கு எதிரான ஆட்டத்தில் தென்னாபிரிக்கஅணி 225 ஓட்டங்கள்

(இங்கிலாந்து)

இங்கிலாந்து - தென்ஆபிரிக்க அணிகளுக்கு இடையிலான மூன்றாவது டெஸ்ட் ஆட்டத்தின், மூன்றாவது நாள் மதியம் வரை தென்ஆபிரிக்க அணி தன் முதலாவது இன்னிங்ஸில் ஐந்து விக்கெட் இழப்பிற்கு 225 ஓட்டங்களுடன் ஆடிக்கொண்டிருந்தது.

இரண்டு விக்கெட் இழப்பிற்கு 84 ஓட்டங்கள் என்ற நிலையில் மூன்றாவது நாளைத் தொடங்கிய தென் ஆபிரிக்க அணி, மூன்று விக்கெட்டுக்களை மளமளவென இழந்தது. இருந்தும், மக்கென்சி 68 ஓட்டங்களுடனும், மார்க் பௌச்சர் 35 ஓட்டங்களுடனும் ஆறாவது விக்கெட் சோடியாக ஆடிக் கொண்டிருந்தார்கள்.

முன்னதாக இங்கிலாந்து துடுப்பெடுத்தாடத் தீர்மானித்து, தனது முதல் இன்னிங்ஸில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 445 ஓட்டங்கள் குவித்தது. இதில் நஸார் உசைன் 116 ஓட்டங்களும், மார்க் பௌச்சர் 106 ஓட்டங்களும் பெற்றனர்.



மகிழ்ச்சியில் நஸார் உசைன்

# 'வடமராட்சி மேற்கு' என்ற பெயரில் பிரதேச செயலகம் அமைக்க முயற்சி

(நெல்லியடி)

'வடமராட்சி மேற்கு' என்ற ஒரு தனியான பிரதேச செயலகம் உருவாக்குவது பற்றி, வடமராட்சி வடக்குப் பிரதேச செயலகம் முயற்சி மேற்கொண்டுள்ளது. மேற்படி புதிய பிரதேச செயலகம் வடமராட்சி வடக்கு, வடமராட்சி தெற்கு - மேற்கு ஆகிய இரு பிரதேச செயலகங்களின் சில கிராம சேவையாளர் பிரிவுகளை உள்ளடக்கியதாக அமையவிருப்பதாகவும் அறியப்படுகிறது. இது சம்பந்தமாக வடமராட்சி தெற்கு - மேற்குப் பிரதேச செயலக ஒருங்கிணைப்புக் குழுவின் அபிப்பிராயம் கோரப்பட்டுள்ளதாகவும் தெரிகிறது.

வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச செயலக ஒருங்கிணைப்புக் குழு கொள்கையளவில் இதனை ஏற்றுக் கொண்டுள்ளதாகவும், அமைக்கவிருக்கும் புதிய பிரதேச செயலகம் பற்றிய செயல்பாடுகளுக்காக உருவாக்கப்படும் குழுவில் வடமராட்சி தெற்கு - மேற்கு (கரவெட்டி) பிரதிநிதித்துவம் உறுதிப்படுத்தப்பட வேணடுமென்றும், புதிய செயலகம் அமைக்கும் போது உள்ளடக்கப்படும் கிராம அலுவலர் பிரிவுகள், செயலகத்திற்கான அமைவிடம் பற்றிய தீர்மானங்கள் எடுக்கப்படும்போது அப்பகுதி மக்களின் அபிப்பிராயங்கள் மதிக்கப்படவேண்டுமென்றும் கோரிக்கை விடப்பட்டுள்ளதாகவும் அறியப்படுகிறது. (13)


நமது ஈழநாடு

ஓராண்டு நிறைவையொட்டி நடத்தப்படும்

## சிறுகதை; கவிதைப் போட்டிகள்

சிறுகதை – முதலாம் பரிசு - 6,000 ரூபா
இரண்டாம் பரிசு - 4,000 ரூபா
மூன்றாவது பரிசு - 2,000 ரூபா

கவிதை – முதலாம் பரிசு - 6,000 ரூபா
இரண்டாம் பரிசு - 4,000 ரூபா
மூன்றாவது பரிசு - 2,000 ரூபா

நிபந்தனைகள்

- எழுதுபவரின் சொந்த ஆக்கமாக இருக்க வேண்டும். ஏற்கனவே பத்திரிகையிலோ, ஏனைய ஊடகங்களிலோ வெளிவராதவையாக இருக்க வேண்டும்.
- மொழிபெயர்ப்புக் கதைகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.
- கதைகள் ஈழநாடு பத்திரிகையின் ஒரு பக்கத்துக்குள் அடங்குவதாக இருக்கவேண்டும். தட்டச்சில் பொறிக்கப்பட்டவையாக இருந்தால் 5 பக்கங்களுக்குள்ளும் கையால் எழுதப்பட்டதானால் 7 பக்கங்களுக்குள்ளும் இருத்தல் வேண்டும்.
- கதைகள் சமகால, சமூகப் பிரச்சினைகளை மையமாக வைத்து எழுதப்படல் வேண்டும்.
- கதைகள் யாவும் 10.09.2003 ஆம் திகதிக்குள் "நமது ஈழநாடு" 267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கப்படவேண்டும்.
- நமது ஈழநாடு பத்திரிகையில் கடமைபுரிபவர்களோ, அவர்கள் குடும்பத்தவர்களோ இப்போட்டியில் பங்குபற்ற முடியாது.
- பரிசுக்குரிய ஆக்கங்களை தேர்வு செய்வது நடுவர் குழுவினதும், ஆசிரியரினதும் முடிவாகும்.

மாணவர்களுக்கான கட்டுரைப் போட்டி பற்றிய விபரங்களை நாளை எதிர்பாருங்கள்.



ராஜா யாழ்ப்பாணம்.

இந்தியாவிலும், இலங்கையிலும் ஒரே தினவெளியீடு

விஜயகாந், கிரண் நடித்த

தென்னவன்



காட்சிநேரம்
10.30, 2.30, 6.30, 9.30

(சி-1284)



நிறஞ்சனாஸ் சங்கானை

இன்று முதல்

அர்ஜுன், கிரண் நடித்த

பரசுராம்

காட்சி நேரம்: 11.00, 2.45, 6.00 (பு.நே.)

வெள்ளி, சனி, ஞாயிறு தினங்களில் மட்டும்

BULE STREAK

இரவுக் காட்சி. 8.45 (பு.நே)

(சி-1285)



## சிறு விளம்பரம்

### தேவை

சோப் வேலை பழகுவதற்கு பயிலுனர்கள் தேவை. மில்க் வைற் தொழிலகம், 525/2, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம். (சி/1302)





தில்லையம்பதி மோட்டோர்ஸ்

விவசாய நீர் இறைக்கும் இயந்திரம்,
மின்சார நீர் இறைக்கும் இயந்திரம் மற்றும்
உதிரிப்பாகங்கள் விற்பனையாளர்கள்.
மொத்தமாகவும், சில்லறையாகவும்
பெற்றுக்கொள்ளலாம்.



GREAVES

இல.236,ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
T.P.021-2222488, 021-2223820

(சி-1316)



## G.A.Q. 2004/2005

## பேராதனை (வெளிவாரி)

- A/L இல் கலை, வர்த்தகம், விஞ்ஞானம்,கணிதம்) 3 பாடங்கள் சித்தியடைந்தவர்களும், பயிற்றப்பட்ட ஆசிரியர்களும் விண்ணப்பிக்கத் தகுதியுடையவர்களாவர்.
- இதற்குரிய பல்கலைக்கழகப் பதிவுகள் எமது நிறுவனத்தினால் செய்து தரப்படும்.
- இதற்குரிய விரிவுரைகள்
  ஆரம்பம் 23.08.2003 (8 மணி)
- இதற்குரிய விண்ணப்பப் படிவங்களையும் விபரங்களையும் நேரில் பெற்றுக்கொள்ளவும்.

விபரங்களுக்கு :
S.அருள்நங்கை
புதிய உயர்கல்லூரி
ஆரியகுளம் சந்தி
யாழ்ப்பாணம்

(சி-1354)





## நல்லைக் குமரன் மலர் வெளியீட்டு விழா-2003

| | | |
|---|---|---|
| இடம் | - | நல்லை திருஞான சம்பந்தர் ஆதீனம் |
| காலம் | - | 19.08.2003 செவ்வாய்க்கிழமை காலை 9.30 மணி(பு.நே) |
| தலைவர் | - | திரு.இ.இராமலிங்கம்<br>மாநகர ஆணையாளரும்<br>சைவசமய விவகாரக் குழுவின் தலைவரும் |
| ஆய்வுரை | - | கலாநிதி என்.சண்முகலிங்கன்<br>தலைவர், சமூகவியல்துறை,<br>யாழ்.பல்கலைக்கழகம் |

மேற்படி விழாவில் பங்குகொண்டு பயனுள்ள பல ஆக்கங்களைத் தன்னகத்தே தாங்கி வெளிவரும் நல்லைக்குமரன் மலரினைப் பெற்றுப்படித்துப் பயன்பெறுமாறு ஆர்வலர்கள் அனைவரையும் அன்போடு அழைக்கின்றோம்.

சைவசமய விவகாரக்குழு
யாழ்ப்பாண மாநகராட்சி மன்றம்.

(சி-1356)





நாளைமுதல்

புதிய முகவரியில்

கணனித்துறையில்
Software Training
Software Development
Service & Maintenance
Computer Repair
எனும் துறைகளில் சிறந்த
நம்பகமான சேவைகளை வழங்குவதில்
வடபகுதியில்
முன்னோடிகளான
நாம்
பலரின் வேண்டுகோளுக்கிணங்க
கணனி விற்பனையையும் (Computer Sales)
வழங்கி எமது சேவையை மேலும் விஸ்தரிப்பதற்காக
நாளைமுதல் 73, பலாலி வீதி, கந்தர்மடம்
எனும் முகவரியில் இயங்கவிருக்கின்றோம் என்பதை
எமது வாடிக்கையாளர்களான
அரச,
அரசசார்பற்ற,
தனியார்துறையினர்
அனைவருக்கும்
அறியத்தருவதில் மிக்க மகிழ்வடைகிறோம்.

மிகக் கெட்டிக்காரர்கள்
நம்பகத் தன்மையுடன் நடந்துகொண்டிருப்பார்கள்

(சி/1360)

STP Your Partner in IT Solutions
73, Palaly Road, Kantharmadam
T.P: 0212222674

# எமது சமூகத்தின் பாதுகாப்பு கேள்விக்குறியாகவுள்ளது; தடுப்பதற்கு நாம் தீவிர நடவடிக்கை எடுத்துவருகின்றோம்!

## கூட்டுறவுதின விழாவில் இளம்பரிதி தெரிவிப்பு



தற்போதைய சமாதானச் சூழ்நிலையில் எமது சமூகத்தின் பாதுகாப்பு கேள்விக்குறியாகவுள்ளது. பாலியல் வல்லுறவுகள், கொள்ளைகள், கொலைகள், விபச்சாரம் என்பன மலிந்து கிடக்கின்றன.

இதைத் தடுப்பதற்கு நாம் தீவிர நடவடிக்கை எடுத்துவருகின்றோம். இதற்குக் காரணமானவர்களைக் கண்டறியும் முயற்சியில் ஈடுபட்டுள்ளோம், கண்டறிந்துமுள்ளோம்.

உரிய தீர்ப்புக்கள், உரிய நேரத்தில், உரிய இடத்தில் எம்மால் வழங்கப்படும். இது மிகவிரைவிலே நடைபெறும். இவ்வாறு யாழ். மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் இளம்பரிதி தெரிவித்தார்.

நேற்று யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்ற 81 ஆவது தேசிய கூட்டுறவுத் தினவிழாவில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே, அவர் இவ்வாறு தெரிவித்தார்.

யாழ். மாவட்ட கூட்டுறவுத் தலைவர் பெ.கனகசபாபதி தலைமையில் நடைபெற்ற விழாவில், இளம்பரிதி மேலும் கருத்துத் தெரிவிக்கையில் -

ஒவ்வொரு இனத்தினதும், நாட்டினதும் பாதுகாப்பு செழுமை, வளர்ச்சி என்பது - அந்த நாட்டினுடைய பலத்திலும், வளத்திலும் மட்டுமல்ல, பாதுகாப்பிலும் தங்கியுள்ளது. எனவேதான், உலகத்திலுள்ள எல்லோரும்- தமது பாதுகாப்பிற்காகப் பல போராட்டங்களை நடத்தினார்கள். எங்களைப் பொறுத்தவரையில் - நாங்கள் பலமாகத்தான் உள்ளோம், வளமாகத்தான் உள்ளோம். அதேவேளை, நாங்கள் எமது பாதுகாப்பை உறுதிப்படுத்தாததால்- எங்களை இழக்கின்ற நிலைக்கு, எமது வரலாற்றையே இழக்கின்ற நிலைக்கு நாம் தள்ளப்பட்டோம்.

இன்று தமிழர்களுடைய வாழ்வுரிமையும், பாதுகாப்பும் அவர்களது இராணுவ பலத்தில்தான் தங்கியுள்ளது என்னும் சூழல் உருவாகியுள்ளது. தமிழர்கள் தமக்காக ஒரு வல்லமையான படையை, இந்த இலங்கைத் தீவிலே கொண்டுள்ளார்கள். தமிழர்களுடைய வாழ்வும், எதிர்காலமும் அவர்களது இராணுவ பலத்திலேயே தங்கியுள்ளபோது, அதனை மேலும் விருத்தியடையச் செய்வதும், உறுதிப்படுத்துவதும் - ஒவ்வொரு தமிழனதும் கடமையாகும். தமிழர்களுடைய இராணுவ பலத்திற்கும் - கூட்டுறவுத்துறைக்கும் நிறையவே தொடர்புண்டு. கூட்டுறவுத்துறையைச் சேர்ந்த அனைவரும், இராணுவ பலத்திற்காகப் பணியாற்றியிருக்கிறார்கள்.

யாழ்ப்பாண மக்களைக் கையாளுவதன்மூலம், தமிழர்களுடைய தேசியத்தைக் கையாளலாம். அதன்மூலம், அவர்களுடைய வாழ்வு உரிமையைக் கையாளலாம் என்பது எதிரியினுடைய வியூகங்களில் ஒன்று. யாழ்ப்பாண மக்கள் களமுனை அனுபவங்கள் உள்ளவர்கள். கெரில்லா யுத்த அனுபவம் உள்ளவர்கள். நாம் யாழ்ப்பாணத்தை முற்றுகையிட்டபோது, எதிரி இக்கட்டான சூழ்நிலையை எதிர்நோக்கினான்.

எனவே, புதிய வியூகத்தை வகுத்தான். அதற்கு யாழ்ப்பாண மக்களையே கவசமாகப் பாவித்தான். இதன் அடிப்படையிலேயே இராணுவம் - எமது மக்களோடு சந்திக்குச் சந்தி நின்று பழகி - அவர்களின் நன்மதிப்பைப் பெறமுனைந்தது. இதன்மூலமாக ஒவ்வொரு இராணுவ வீரனும் நல்லவன் எனக்காட்டி, இதன்மூலமாக ஒட்டுமொத்த இராணுவமுமே நல்லவர்கள் என்று - அவர்களால் தமக்கு எந்தப் பிரச்சினைகளும் இல்லையென, மக்களை எண்ணவைக்க அரசு முயன்றது.

ஆனால், மக்கள் புதிதொரு வியூகத்தை அமைத்தார்கள். அடிப்படை அரசியற்தளத்திலே நின்ற எமது மக்கள் - இராணுவமே பிரச்சினைதான் எனப் பல போராட்டங்களை முன்னெடுத்தார்கள். அதன்மூலமாகத்தான், நாம் இன்று வலுவான ஓர் இராணுவ பலத்திலே நிற்கின்றோம். யுத்தத்தின் மூலம் சமாதானம் என்ற எண்ணம் - அடியோடு தோற்கடிக்கப்பட்டது.

சமாதானத்தைப் பெறவேண்டுமானால் - யுத்தத்தை நிறுத்தவேண்டும். அதுதான் இன்றைய சமாதானக் காலம். இந்தவேளை, நடைபெறும் இந்தக் கூட்டுறவுத் தினத்தில் சில விடயங்களை நாம் கவனத்தில் கொள்ள வேண்டும். கூட்டுறவு ஊழியரின் வேதனம் அதிகரிக்கப்படல்வேண்டும். அப்படி அதிகரித்தால் - உழைப்பவர்களின் கையாடல்கள், சோர்வுகள் என்பன அடியோடு நீங்கும். கூட்டுறவு ஊழியர்கள் சிலர் - கடுமையான உழைப்பாளிகளாக இருக்கின்றார்கள். அவர்களது தேவைகளோ அதிகமாக உள்ளபோதும், ஊதியம் குறைவாக உள்ளது. அவர்களின் வளர்ச்சி ஒரு சமுதாயத்தின் வளர்ச்சி. அதுவே, ஒரு தேசத்தின் வளர்ச்சியாகும். எனவே, அவர்களின் வேதனம் அதிகரிக்கப்படவேண்டும்.

இப்போது, நாம் இடைக்கால நிர்வாகம் குறித்து ஆராய்கின்றோம். எம்மால் ஒரு தீர்வுத்திட்டம் முன்வைக்கப்படும். நாம் சட்டத்திற்குப் புறம்பான வகையிலேதான் ஒரு தீர்வைக் கேட்கிறோம். அப்போதுதான் அதில் வலுவிருக்கும். இதுவும் அரசினால் புறக்கணிக்கப்படுமாக இருந்தால், எம்மைவிட, சிங்களரே கூடிய அபாயத்தை எதிர்நோக்கவேண்டிவரும். எமது விடுதலைப் போராட்டத்துக்கு அதன்மூலமாகவே அங்கீகாரம் கிடைக்கும்.

ஒரு நாட்டின் அரசியற்சட்டம் - ஒரு மக்களின் வாழ்வுரிமைக்குத் தடையாக இருக்குமானால், அவர்களைத் தமது வழியிலேயே செல்லவிடுதல் வேண்டும். இதுவே சர்வதேச சட்டவரைமுறையாகும் எனத் தெரிவித்தார்.

காலை 10 மணிக்கு ஆரம்பமான இந்நிகழ்வில் - விடுதலைப் புலிகளின் நிர்வாகத்துறையைச் சேர்ந்த இளங்கோ, கூட்டுறவு உதவி ஆணையாளர், கூட்டுறவாளர்கள் எனப் பலரும் திரண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## ரி.எம்.தசநாயக்க மீது குற்றச்சாட்டு

(கொழும்பு)

நாடாளுமன்ற உறுப்பினர் ரி.எம். தசநாயக்க - பொலிஸாரிடம் தகாத வார்த்தைகளைப் பிரயோகித்தார் எனக் குற்றஞ்சுமத்தப்பட்டுள்ளார்.

நேற்று அதிகாலை, சிலாபத்திலிருந்து வந்துகொண்டிருந்த தசநாயக்கவின் காரை - பொலிஸார் வழிமறித்தபோது, ஏற்பட்ட வாய்த்தகராறில்- பொலிஸாரைத் தகாத வார்த்தைகளால், தசநாயக்க பேசினார் என்று பொலிஸார் முறைப்பாடு செய்துள்ளனர்.

கடமையிலிருந்த ஒரு அரச ஊழியர் மீது, நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் தகாதவார்தைகளைப் பிரயோகித்தமை - சட்டத்தை அவமதிப்பதாகக் குறிப்பிட்டே, பொலிஸார் சிலாபம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளனர்.

## ஷெல் காஸ் விலை உயர்வு

(கொழும்பு)

ஷெல் காஸ் சிலிண்டர் ஒன்றின் விலை 25 ரூபாவால் அதிகரிக்கப்பட்டுள்ளது. இந்த விலை உயர்வு- நேற்றுமுதல் அமுலுக்கு வந்துள்ளதாக, ஷெல் காஸ் நிறுவனம் அறிவித்துள்ளது.

12.5 கிலோகிராம் எடையுடைய ஷெல் காஸ் ஒன்றின் தற்போதைய விலை 570 ரூபாவாகும். இதன் புதிய விலை 595 ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளது என அறிவிக்கப்பட்டுள்ளது.

## முஸ்லிம் காங்கிரஸ் புத்தளம் மத்திய குழு

# ஐக்கிய தேசியக் கட்சிக்கு வழங்கிவரும் ஆதரவை விலக்கப்போவதாக எச்சரிக்கை!

சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் புத்தளம் மத்தியகுழு, ஐ.தே.கட்சி அரசுக்கு வழங்கும் ஆதரவை விலக்கிக்கொள்ளப்போவதாக அறிவித்துள்ளது.

புத்தளம் மாவட்ட அபிவிருத்திக் குழுவிலிருந்து ஏ.எச்.எம்.அஸ்வரை, ஐ.தே. கட்சி உடனடியாக விலக்கிக் கொள்ளவேண்டும். இல்லையேல், புத்தளம் மாவட்டத்தில் ஐ.தே. கட்சிக்கு வழங்கும் ஆதரவை, முஸ்லிம் காங்கிரஸ் விலக்கிக் கொள்ளும் என அறிவித்துள்ளது.

ஏ.எச்.எம்.அஸ்வர் - முஸ்லிம் காங்கிரஸ் வளர்ச்சிக்கு எதிராக, அரசியல் பழிவாங்கல் நடவடிக்கைகளில் ஈடுபடுவதாகக் குறிப்பிட்டே, அவரைப் புத்தளம் அபிவிருத்திக் குழுவிலிருந்து விலக்கிக்கொள்ளுமாறு, முஸ்லிம் காங்கிரஸ் கேட்டுள்ளது என்று தெரிவிக்கப்படுகிறது.

## கோரதீவுப் பகுதியில் ஆணின் சடலம்

(சாவகச்சேரி)

கேரதீவுப் பகுதியில் பற்றைக் காட்டிலிருந்து ஆணின் சடலம் ஒன்று, நேற்றுமுன்தினம் கண்டெடுக்கப்பட்டுள்ளது. புங்குடுதீவு ஆறாம் வட்டாரத்தைச் சேர்ந்த சின்னத்தம்பி சிவஞானசுந்தரம் (வயது 55) என்ற மனநோயாளியே இவர் என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

கடந்த புதன்கிழமை வீட்டிலிருந்து வெளியேறிய இவர், இரண்டு தினங்களாகியும் வீடு திரும்பவில்லை. இவரை உறவினர்கள் தேடியும் கண்டுபிடிக்கமுடியவில்லை. கேரதீவிலுள்ள சுடலை ஒன்றிற்கு அண்மையில் சடலம் ஒன்று கிடப்பதாக அறிந்த உறவினர்கள், அங்கு சென்று சடலத்தை இனங்காட்டினர். இந்தச் சடலம் பொலிஸாரினால் மீட்கப்பட்டு, யாழ். போதனா வைத்தியசாலையில ஒப்படைக்கப்பட்டுள்ளது. (121)

## இந்தியா குத்தகைக்கு எடுத்த

# எண்ணெய்க் குதங்களின் மீது புலிகள் தாக்குதல் நடத்தலாம்!

## என்கிறார் லக்ஷ்மன் கதிர்காமர்

இலங்கையின் களநிலவரங்கள் மீதான அக்கறையுடன், இலங்கையின் இனப்பிரச்சனைக்குத் தீர்வுகாண்பதற்கான எந்தவொரு அரசியல் யாப்பு ஏற்பாட்டின்மீதும் - இந்தியாவுக்கு நியாயபூர்வமான அக்கறை இருக்கிறது என்று, முன்னாள் வெளிநாட்டமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் தெரிவித்தார்.

திருகோணமலைத் துறைமுகம் தற்பொழுது விடுதலைப் புலிகளால் சூழப்பட்டிருப்பதாகவும், அங்கு இந்தியக் கம்பனிகளால் குத்தகைக்கு எடுக்கப்பட்டிருக்கும் எண்ணெய்க் குதங்கள் மீது, புலிகள் தாக்குதல் நடத்தும் ஆபத்து இருக்கிறது என்றும், புலிகள் தனிநாடு ஒன்று அமைப்பதை இந்தியா விரும்பாது என்று - தான் நினைப்பதாகவும்,

இது தொடர்பாக இந்தியாவை உஷார்படுத்த விரும்புவதாகவும், அவர் தெரிவித்திருக்கிறார்.

இந்தியாவுக்கு விஜயம் மேற்கொண்டிருக்கும் லக்ஷ்மன் கதிர்காமர்- இந்திய வெளிநாட்டமைச்சர் ஜஸ்வந்த்சின்ஹா, தேசிய பாதுகாப்பு ஆலோசகர் பிரஜேஷ் மிஷ்ரா ஆகியோரைச் சந்தித்த பின்னர் - இந்து நாளிதழுக்கு வெள்ளிக்கிழமை அளித்த பேட்டியொன்றில் இவ்வாறு கூறியிருக்கிறார்.

# இடைக்கால நிர்வாகசபை குறித்து புலிகளுடன் பேச தயாராகவுள்ளோம்!

## ஹிஸ்புல்லா எம்.பி. தெரிவிப்பு

இடைக்கால நிர்வாகசபை குறித்து, விடுதலைப் புலிகளுடன் பேசுவதற்கு வட - கிழக்கு முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர் ஒன்றியம் தயாராகவுள்ளது என அதன் செயலாளரும், மட்டக்களப்பு மாவட்ட எம்.பியுமான எம்.எல்.ஏ.எம்.ஹிஸ்புல்லா தெரிவித்தார்.

இடைக்கால நிர்வாகசபை குறித்து, முஸ்லிம் தரப்பினருடனும் பேச்சுவார்த்தை நடத்தி - அவர்களையும் இணைத்தே, தீர்வொன்றைக் காணவேண்டுமென்று தமது தலைமை விரும்புவதாக, தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் வன்னியில் செய்தியாளர்களிடம் கருத்து தெரிவித்திருந்தார்.

இது குறித்து ஹிஸ்புல்லாவிடம் கேட்டபோதே, அவர் இவ்வாறு தெரிவித்தார். தமிழ்ச்செல்வன் இவ்வாறு கூறிய கருத்துத் தொடர்பாக, நான் அறியவில்லை. ஆனால் வட-கிழக்கில் தனியான இடைக்கால நிர்வாக சபை வேண்டும் என்பதே எமது நிலைப்பாடாகும். ஆனால், இவ்விடயம் குறித்து, விடுதலைப் புலிகளுடன் பேச நாம் தயாராக உள்ளோம். இதில் விட்டுக்கொடுப்புக்களைச் செய்து - தீர்வொன்றுக்கு வர நாம் தயாராக உள்ளோம் என்றும், ஹிஸ்புல்லா தெரிவித்தார்.

# பிரபல்யமான பாடசாலை ஒன்றின் அதிபர் இனந்தெரியாதவர்களால் தாக்கப்பட்டார்!

## கொழும்பு மொறட்டுவப் பகுதியில் சம்பவம்

(கொழும்பு)

கொழும்பில் பிரபல்யமான பாடசாலை ஒன்றின் அதிபர், இனந்தெரியாத நபர்களால் தாக்கப்பட்டார்.

இச்சம்பவம் தொடர்பாக - அதே பாடசாலையில் கற்பிக்கும் ஆசிரியர்கள் நால்வர், பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

நேற்றுமுன்தினம் நடைபெற்ற இச்சம்பம் தொடர்பாகக் கைதுசெய்யப்பட்டவர்கள், மொறட்டுவப் பொலிஸ்நிலையத்தில் தடுத்துவைக்கப்பட்டுள்ளனர்.

தாக்குதலுக்குள்ளான அதிபர் - அச்சம்பவம் பற்றித் தெரிவிக்கையில், தன்னைத் தாக்கிய சம்பவத்தில், பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டு, தடுத்துவைக்கப்பட்டுள்ள நான்கு பேருக்கும் தொடர்பு இருப்பதாகத் தெரிவித்துள்ளார். மொறட்டுவ பொலிஸார் இச்சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுவருகின்றனர்.

## ஐக்கிய தேசிய முன்னணி அரசு

# இடைக்கால நிர்வாகம் என்ற போர்வையில் புலிகளுக்கு தனிநாடு வழங்க முற்படுகிறது!

## *ஜே.வி.பியின் பிரசாரச் செயலாளர் விமல் வீரவன்ச*

(கொழும்பு)

இடைக்கால நிர்வாகம் என்ற போர்வையில் - தமிழீழ விடுதலைப் புலிகளுக்குத் தனிநாடு வழங்க அரசு முற்படுகிறது. இந்த நாட்டு மக்களை ஏமாற்றும் இந்தச் செயலை, நாம் ஒருபோதும் அனுமதிக்கமாட்டோம் என, ஜே.வி.பியின் பிரசாரச் செயலாளர் விமல் வீரவன்ச தெரிவித்தார்.

நுகேகொட பஸ் நிலையத்தின் முன்பாக நடைபெற்ற பிரசாரக் கூட்டத்தில் பேசும்போதே, அவர் இவ்வாறு தெரிவித்தார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் கபட நாடகங்கள் - நாங்கள் நன்கு அறிந்தவையே. தேர்தலுக்கு முன்பே அவர்களைப் பற்றி, நாங்கள் தெரிவித்திருந்தோம்.

சமாதானம் என்ற போர்வையில், இடைக்கால நிர்வாகசபை குறித்த வரைபை, அரசாங்கம் - புலிகளுக்கு ஒருவிதமாகவும், ஜனாதிபதிக்கு வேறொரு விதமாகவும் கையளித்துள்ளது.

விடுதலைப் புலிகளுக்கு அனுப்பி வைக்கப்பட்ட நகல் பற்றிய தகவல்களை, ஏன் மக்களுக்கு கூறமுடியாது என்பதே எமது கேள்வியாகும். இடைக்கால நிர்வாகசபை மூலம்- தமிழீழம், சிங்கள தேசம் என்று இரு பிரிவுகளாக இலங்கை பிரிக்கப்படவுள்ளது: மக்களைக் கவர்வதற்கு இடைக்கால நிர்வாகசபையில் ஒரு முஸ்லிம் உறுப்பினரும், சிங்களவர் ஒருவரும் நியமிக்கப்படுவார்கள் என்று அரசாங்கம் கூறுகிறது.

இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதியில் - புலிகள் முகாம் அமைத்துள்ளனர். இதனால், அப்பகுதியில் நிலைகொண்டுள்ள படையினருக்கு ஆபத்து ஏற்படலாம்.

சமாதானம் என்ற சொல்லை வைத்துக்கொண்டு, ஐ.தே.க அரசு புகழ் தேடுகிறது எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

மட்டக்களப்பில் தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தால்

# போரினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வீடுகள் அமைத்துக்கொடுக்கப்பட்டன

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு - அம்பாறை மாவட்டங்களில் போரினால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு 110 கோடி ரூபா செலவில் - 5000 வீடுகளைத் தமிழர் புனர்வாழ்வுக் கழகம் அமைத்துக் கொடுத்துள்ளது.

இந்த இரு மாவட்டங்களையும் சேர்ந்த 17 பிரதேச செயலாளர் பிரிவுகளிலிருந்து, சுயமாகத் தமக்கென வீடுகளை அமைத்துக்கொள்ள முடியாத, பொருளாதாரத்தில் மிகவும் மோசமாகப் பின்தள்ளப்பட்ட, பெண்களைக் குடும்பத்தலைவியாகக் கொண்ட குடும்பங்கள், தாய் - தந்தையரை இழந்த சிறுவர்களின் குடும்பங்கள், அங்கவீனமுற்ற உழைப்பாளிகளின் குடும்பங்கள், உளவியல் தாக்கங்களினால் சித்த சுவாதீனமற்ற குடும்பங்கள், அரசியற் கைதிகளாக உள்ளடக்கப்பட்ட குடும்பங்கள் மற்றும் பிள்ளைகள், ஆதரவாளர்கள் யாருமற்ற முதியவர்களின் குடும்பங்கள் எனத் தெரிவுசெய்யப்பட்டு, அவர்களின் வாழ்க்கைத்தரத்தை உயர்த்துவதற்கென 5 ஆயிரம் வீடுகள் அமைக்கப்பட்டு, மக்களின் பாவனைக்காகத் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினரால் கையளிக்கப்பட்டுள்ளன.


## சிறுமியின் கைச்சங்கிலி திருடரால் அபகரிப்பு!

(அரியாலை)

வீதியால் சென்றுகொண்டிருந்த சிறுமி ஒருவரிடம் - மோட்டார் சைக்கிளில் வந்த நபர் - கைச்சங்கிலி ஒன்றை அறுத்துச் சென்றுள்ளார்.

நேற்றுமுன்தினம் காலை ஏழு மணியளவில், யாழ்ப்பாணம், ஸ்ராண்லி வீதியில் இடம்பெற்ற இச்சம்பவத்தில், ரஞ்சித்குமார் விதுஷா என்ற ஏழு வயதுச் சிறுமியே, தன் கைச் சங்கிலியைப் பறிகொடுத்தார்.

மோட்டார் சைக்கிளில் வந்து, இடம் விசாரிப்பதுபோல் பாசாங்கு செய்து, திருட்டு நடவடிக்கையில் ஈடுபடும் சம்பவங்கள் அண்மைக் காலமாக அதிகரித்து வருவதும், கடந்த 9 ஆம் திகதி - இராசாவின் தோட்டம் பகுதியிலும் இவ்வாறான சம்பவம் ஒன்று இடம்பெற்றது என்பதும் குறிப்பிடத்தக்கது. (55)



கிளிநொச்சி மாவட்டத்தில் மீளக்குடியேறிய மக்களின் நன்மை கருதி, ஒ.பி.ஏ.எல் இன் அனுசரணையுடன் லயன்ஸ் கழகத்தினூடாக கிளிநொச்சி வைத்தியசாலைக்கு - அன்பளிப்புப் பொருட்கள் வழங்கப்பட்டன. இதில் பிரதேச செயலர் நித்தியானந்தன், டொக்டர் கதிரவேற்பிள்ளை, வைத்திய கலாநிதி திருமதி. சொலமன் ஆகியோர் படத்தில் நிற்பதைக் காணலாம்.

### மனவளர்ச்சி குன்றிய சிறுவர்களுக்கான மதிப்பீடு

(யாழ்ப்பாணம்)

மனவளர்ச்சி குன்றிய சிறுவர்களுக்கான மதிப்பீட்டுச் செயற்திட்டமொன்று, அயர்லாந்திலிருந்து வந்துள்ள மருத்துவ நிபுணர்களின் தலைமையில் சென்.ஜோன்ஸ் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 19 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை முதல் 22 ஆம் திகதி வெள்ளிக்கிழமைவரை நடைபெறவுள்ள இந்தச் செயற்திட்டத்தில் காலை 9 மணி முதல் மாலை 5 மணிவரை மனநலம் பாதிக்கப்பட்ட சிறுவர்கள் கலந்துகொள்ளலாம்.

### திறப்புக்கோர்வை கண்டெடுப்பு

(யாழ்ப்பாணம்)

ஆரியகுளம் சந்திக்கும் ஆஸ்பத்திரி வீதிக்கும் இடையில் கண்டெடுக்கப்பட்ட திறப்புக்கோர்வையொன்று, 'நமது ஈழநாடு' அலுவலகத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர்கள் தகுந்த ஆதாரம், காட்டி நேரில் வந்து பெற்றுக்கொள்ளலாம்.

### 50 ஆவது வருட நினைவுதினம்

1953 இல் அரசின் மக்கள் விரோத நடவடிக்கைகளுக்கு எதிராக, மக்கள் தேசமெங்கும் கிளர்ந்து எழுந்த ஹர்த்தாலின் 50 ஆவது வருட நினைவுதினம் இன்று ஞாயிற்றுக்கிழமை பி.ப. 4 மணிக்கு நாவலர் கலாசார மண்டபத்தில் அரசாங்க லிகிதர் சேவைச் சங்கத் தலைவர் இ.தவராசா தலைமையில் நடைபெறவுள்ளது.

## மாங்குளம் மகா வித்தியாலயத்தில் ஆசிரியர் விடுதி இன்மையால் சிரமம்

வவுனியா வடக்கு - கல்வி வலயத்திற்குட்பட்ட மாங்குளம் மகா வித்தியாலயத்தில் கல்விகற்பிக்கும் வெளிமாவட்டங்களைச் சேர்ந்த ஆசிரியர்கள் தங்குவதற்கான விடுதிகள், வீடுகள் இல்லாமையினால் பெரும் சிரமங்களை எதிர்நோக்குவதாக, பாடசாலை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

படையினரால் மேற்கொள்ளப்பட்ட ஜெயசிக்குறு இராணுவ நடவடிக்கையால், இடம்பெயர்ந்து இயங்கிய இப்பாடசாலையின் கட்டடங்கள் - ஆசிரியர் விடுதிகள், வீடுகள் என்பன அழிக்கப்பட்டன. தற்போது இப்பாடசாலை மாணவர்களின் நன்மை கருதி, சொந்த இடத்தில் இயங்க ஆரம்பித்துள்ளது.

இந்நிலையில் வெளிமாவட்டங்களிலிருந்து இங்கு வந்து கல்வி கற்பிக்கும் ஆசிரியர்கள் தங்குவதற்கு விடுதி அமைக்கப்படவில்லை. இதனால், ஆசிரியர்கள் தங்குவதற்கு இடவசதி இன்மையால், பெரும் சிரமங்களை எதிர்நோக்க வேண்டியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

### தாச்சிச் சுற்றுப் போட்டி

மானிப்பாய் ஆனந்தா விளையாட்டுக்கழகம் நடாத்தும் தாச்சிச் சுற்றின் இறுதிப் போட்டி - ஆனந்தா விளையாட்டுக்கழக மைதானத்தில் இன்று நடைபெறவுள்ளது.

இறுதிச் சுற்றுப் போட்டியில் தென்றல் விளையாட்டுக்கழகமும், அண்ணா விளையாட்டுக்கழகமும் பங்குபற்றவுள்ளன. வெற்றிபெறும் அணிக்கு சண்டிலிப்பாய் பிரதேச செயலக விளையாட்டு உத்தியோகத்தர் மோகனதாஸ் பரிசில்களை வழங்குவார்.

### விளையாட்டு விழா

மானிப்பாய் கிழக்கு பாரதி பாலர் கல்விப் பூங்காவின் விளையாட்டு விழா - நாளை திங்கட்கிழமை மாலை 2 மணிக்கு கல்விப் பூங்காவின் விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளது.

மானிப்பாய் கிழக்கு - பாரதி சனசமூக நிலையத் தலைவர் க.திருநாவுக்கரசு தலைமையில் நடைபெறவுள்ள இவ்விழாவில், சர்வோதய செயற்திட்ட நிறைவேற்றுநர் கனகரத்தினம், வலிகாமம் முறைசாராக் கல்விப் பணிப்பாளர் சி.சிவநேசன் ஆகியோர் முதன்மை விருந்தினர்களாகக் கலந்துகொள்ளவுள்ளனர்.

## கிளிநொச்சி வைத்தியசாலை ஊழியர்களுக்கு கையுறைகள்

சுவிஸ் நாட்டில் புலம்பெயர்ந்து வதியும் தமிழ்க் குடும்பம் ஒன்றினால் கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலைகளில் பணிபுரியும் ஊழியர்களின பாவனைக்கென ஒருதொகுதி கையுறைகள் அன்பளிப்பாக வழங்கப்பட்டன.

500 கையுறைகள் அடங்கிய பொதியினை - கிளிநொச்சி மாவட்ட அரச அதிபருக்குச் சுவிஸ் நாட்டில் வதியும் வரதபாலன் தியாகச்செல்வி குடும்பத்தினரால் அனுப்பிவைக்கப்பட்டது. மேற்படி கையுறைகள் அடங்கிய பொதியினை, கடந்த செவ்வாய்க்கிழமை கிளிநொச்சி அரச செயலகத்தில் வைத்து கிளிநொச்சி அரசாங்க அதிபர் - கிளிநொச்சி மாவட்ட பிரதி மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர், வைத்திய கலாநிதி சத்தியமூர்த்தியிடம் கையளித்தார்.

கையுறைகள் இல்லாதநிலையில், கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலைகளில் கடமைபுரியும் ஊழியர்கள் பெரும் சிரமத்தை எதிர்நோக்கி வருகின்றனர் என்ற செய்தியினை, பத்திரிகை வாயிலாக அறிந்ததன் காரணமாகவே மேற்படி கையுறைகளை அன்பளிப்பாக அனுப்பிவைத்தோம் என, சுவிஸ் தம்பதிகள் தெரிவித்துள்ளார்கள் என அரச அதிபர் குறிப்பிட்டார். (122)

### புறநிலை அலகின் விடியோ படக்காட்சி

யாழ்.பல்கலைக்கழக புறநிலைப் படிப்புகள் அலகு வழங்கிவரும் திரைப் படக்காட்சித் தொடரில் "சிட்னி லூமெற்" இயக்கிய **Murder in the orient express** என்னும் ஆங்கிலத் திரைப்படம் - இன்று காலை 10 மணிக்கு புவியியற்துறை மண்டபத்தில் காண்பிக்கப்படும்.

நெடுந்தீவுப் பகுதியில்

## கட்டாக்காலி நாய்களை நஞ்சூட்டியழிக்க ஏற்பாடு!

(நெடுந்தீவு)

கட்டாக்காலி நாய்களை நஞ்சூட்டி அழிக்கும் பணியினை, எதிர்வரும் 20 ஆம் திகதி தொடக்கம் நெடுந்தீவில் நடைமுறைப்படுத்த இருப்பதாக, நெடுந்தீவுப் பகுதிப் பொதுச் சுகாதாரப் பரிசோதகர் தெரிவித்துள்ளார்.

பொதுமக்கள் தங்கள் வளர்ப்பு நாய்களைக் கட்டி வளர்க்குமாறும், தவறும் பட்சத்தில் கட்டாக்காலிகள் அனைத்தும் அழிக்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த பல மாதங்கள் தொடர்ந்து பலருக்குக் கடித்து வந்த வீட்டு வளர்ப்பு நாயொன்று, வீட்டாரின் சம்மதத்துடன் நஞ்சூட்டிக் கொல்லப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.


வாழ்க வளமுடன்




முதலாவது அகவையில்



பெயர் : ச.பிரியந்தன்
முகவரி: விளையாட்டரங்க வீதி, கோப்பாய்.

முதலாவது அகவையில்

பெயர் : றொ.கமிலஸ்
முகவரி: அல்வாய் வடக்கு, அல்வாய்.



மூன்றாவது அகவையில்



பெயர் : வ.சோபிகாந்
முகவரி: 2 ஆம் வட்டாரம், நெடுந்தீவு.

மூன்றாவது அகவையில்

பெயர் : இ.அபிராமி
முகவரி: கே.கே.எஸ். வீதி, தையிட்டி.



பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றோம்

வாழ்க வளமுடன்



சிறாரின் பெயர்:------------------------------

முகவரி :------------------------------

பிறந்த ஆண்டு:------------------------------

கூப்பன்கள் பத்தும், புகைப்படமும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.

------------------
பெற்றார் ஒப்பம்

Sports Sports Sports Sports Sports Sports Sports Sports Sports Sports Sports Sports Sports Sports Sports Sports Sports

## விளையாட்டு அரங்கம்

# தகுதியுடையவர்

எமது மண்ணில் வேகமான வளர்ச்சியைக் காட்டக் கூடிய வகையில் வளர்த்தெடுக்கக் கூடியதொரு விளையாட்டு உதைபந்தாட்டம்.

இது தொடர்பில் யாழ்ப்பாண உதைபந்தாட்டச் சங்கத் தலைவரும், இலங்கை உதைபந்தாட்டச் சம்மேளனத்தின் உதவிப் பொதுச்செயலாளரும், யாழ். உதைபந்தாட்ட மத்தியஸ்தர் சங்க உபதலைவரும், இலங்கைப் பாட



லண்டன் சுற்றுலாவில் அந்தனிப்பிள்ளை

சாலை உதைபந்தாட்டச் சங்கத்துடனான யாழ். மாவட்டப் பாடசாலைகளின் சார்பில் ஒருங்கிணைப்பாளருமான அந்தனிப் பிள்ளை கிளிப்பேட்டுடன் ஒரு கலந்துரையாடலை மேற்கொண்டோம். இவர், தனது இளமைக் காலத்தில் உதைபந்தாட்டத்துறையில் குறிப்பிடத்தக்க சாதனைகள் பதித்தவர். அகில இலங்கைப் பாடசாலைகளின் அணிவீரராக 1969 இல் இந்தியா சென்றவர்.

1972 இல் பரியோவான் கல்லூரி மாணவனாக இருந்த போதே, இலங்கைத் தேசிய அணியில் அங்கம்வகித்த பெருமை கொண்டவர்.

இன்று பரியோவான் கல்லூரியின் ஆசிரியர், பயிற்றுநர். அத்தோடு, நீண்டகாலமாகத் தொடர்ந்து, தான் பிறந்த ஊரின் சென்.அன்ரனிஸ் விளையாட்டுக்கழகத்தின் வீரர், பயிற்றுநர்.

மேலும், கடந்த இருபத்தைந்து வருடங்களாக யாழ். உதைபந்தாட்ட நிர்வாகமட்டத்தில் ஏதோவொரு வகையில் முறிவில்லாத தொடர்புகளைக் கொண்டிருப்பவர்.

உதைபந்தாட்டப் பயிற்றுநர் துறையில் ஆறேழு கற்றல் துறைகளைப் பூர்த்தி செய்துள்ள இவர், தற்போது **AFC-C- LICENCE** பெற்ற பயிற்றுநராக உள்ளார். (இந்த **LICENCE** பெற்றவர்களே பயிற்றுவிக்கும் தகுதி பெற்றவர்கள்). 1990 இல் **FIFA** தெரிவுசெய்த ஆறு பயிற்றுநர்களில் ஒருவராக இருந்தும், நாட்டுப் பிரச்சினைகளின் காரணமாக அதில் கலந்துகொள்ள இயலவில்லை என்று கூறும் இவர், ஒரு நாடு கடந்த மத்தியஸ்தரைக் கவரும் சந்தர்ப்பத்தை இழந்ததைச் சுட்டிக்காட்டுகிறார்.

யாழ்ப்பாணத்தைப் பொறுத்தவரை, தற்போதைய உதைபந்தாட்ட வளர்ச்சிநிலை எவ்வாறு இருக்கிறது என்று கேட்டபோது - அவ்வளவு தூரம் இன்றையநிலை குறித்து, மகிழ்ச்சி தெரிவிக்க இயலாதென்று கூறுபவர், இதற்கான காரணங்களாக 1995 ஆம் ஆண்டின் இடப்பெயர்வு, இன்றைய நவீன நுட்பத்திறன்கள் பற்றியபோதிய அறிவின்மை, அதற்கான வசதியின்மை, யுத்த சூழலில் விளையாட்டு ஆர்வம் குறைந்துபோனமை, போஷாக்குக் குறைவு, சிறந்த வீரர்கள் எல்லாம் நம் மண்ணிலும், உள்நாட்டிலும் - வெளிநாட்டிலும் சிதறிப்போனமை என்ற காரணங்களைக் கூறிச்செல்கின்றார்.

அப்படியாயின், பொறுப்பான பதவியிலிருக்கும் நீங்கள், உங்கள் அமைப்பு - என்ன நடவடிக்கைகளை எடுத்துள்ளீர்கள் என்று வினவினோம். தற்போது கழகங்கள் - வீரர்கள் அற்று, போட்டிகள் என்பனவெல்லாம் செயற்பட்டுக் கொண்டுதான் இருக்கின்றன. ஆனால், இதன் நிறைகுறைகள் யுத்தப் பாதிப்புகளை, நொந்துபோன நிலையிலிருந்தே பார்க்க வேண்டும்.

இதனைத்தான் யாழ். மாவட்ட ஐந்து கல்வி வலயப் பணிப்பாளர்களின் அனுமதியுடன், ஐந்து உதைபந்தாட்டச் சங்கங்கள் அமைத்துள்ளோம். இதனடிப்படையில் 13 - 15, 17-19 வயதிற்குட்பட்ட சுற்றுப்போட்டிகளை, கடந்த இரண்டு வருடங்களாக நடாத்தி வருகின்றோம்.

இதேவேளை, ஆர்வமுள்ள ஆசிரியர்களுக்குப் பயிற்றுநருக்கான பயிற்சிகளையும் கொடுத்து வருகின்றோம். எங்கள் முக்கிய இலக்கு 13 மற்றும் 15 வயதிற்குட்பட்டவர்கள் தான். இன்னும் ஐந்து வருடங்களில் மிகப்பெரும் மாற்றங்களை யாழ்ப்பாணப் பிரதேசத்தில் இவர்கள் காட்டுவார்கள் என்கிறார் நம்பிக்கையுடன். இதனைவிடுத்து, இந்த நிமிடத்தில் சாதனை புரியுங்கள் என்று கேட்காதீர்கள். அது சாத்தியமல்ல, என்கிறார்.

இதேவேளை, யாழ். மாவட்ட அணிகளின் பிரதிநிதிகளாகக் கொழும்பு சென்ற சென்.ஹென்றீஸ் கல்லூரி அணி பற்றியும், நுவரெலியா செல்லப்போகின்ற அளவெட்டி அருணோதயாக் கல்லூரி அணி பற்றியும் குறிப்பிடுகிறார். இந்தவகையில், சிறந்த போட்டிகளை மாணவருக்கு உருவாக்கிக் கொடுப்பது அவசியம் என்பதே இவரது கருத்து.


சரியான கட்டமைப்பு உருவாக - ஐந்து கல்வி வலயங்களிலிருந்தும் 15 வயதிற்குட்பட்ட ஐந்து அணிகளைத் தெரிவு செய்து, அதிலிருந்து ஒரு அணியைத் தெரிவுசெய்து, வதிவிடப் பயிற்சிமுறையின்கீழ் மிகுந்த உயர் செயற்பாட்டுடன் பயிற்சி கொடுக்கும் எண்ணம் உண்டு.

அப்போது, யாழ். மாவட்ட அணியே ஆட்டங்களில் பங்கு கொள்ளும். தற்போதைய நிலையில் கிடைக்கும் சந்தர்ப்பத்தை விடக்கூடாது என்பதற்காகவே, பலமான பாடசாலை அணிகளை அனுப்புகிறோம், என்கிறார்.

பாடசாலை மட்ட உதைபந்தாட்டம் தொடர்பில் - இவருடன் நிறைய விவாதிக்க முடிந்தது. தாங்கள் எதிர்பார்த்தது பாவித்த காலணிகள் தந்துதவுவதாகக் கூறியபோதும், உடல்நலக் காரணங்களைக் காட்டி, அவற்றை இங்கு கொண்டு வருவதில் தடங்கல் ஏற்பட்டு விட்டதென்றும் கூறிகிறார்.

யாழ்ப்பாண உதைபந்தாட்டச் சங்கம் பாடசாலை மாணவருக்கு உதவ நிறைய ஆர்வம் இருந்தாலும், நிதிவசதி குறைவாக இருப்பதால், சிறிதளவே செய்யமுடிகின்றது என்றும் கூறுகிறார்.

எதுவித வசதியீனங்கள் இருந்தாலும், எம்மைவிடத் தரம்கூடிய அணிகளுடன் விளையாடுவதே, எம்மை வளர்த்துக்கொள்ள உதவும எனககூறும் இவர், இதற்காக அணிகள் - யாழ்ப்பாணம் வருதல், அதேபோல் யாழ். அணிகள் தென்னிலங்கை செல்லுதல் என்பன அவசியம் என்பதையும் சுட்டிக்காட்டி, நிதி நிறைந்தவர் உதவுங்கள் என்கிறார். நியாயமான கோரிக்கை.




லண்டன் சுற்றுலாவில் அந்தனிப்பிள்ளை

தனது இளமைக் காலத்தினை நினைவுகூரும் அவர், தனது காலத்தில் சென். அன்ரனீஸ் கழக வீரர்கள் ஒவ்வொருவரும் தேசியத் தரம்மிக்கவர்களாகவே இருந்தார்கள். ஆனால், இவர் பிரான்சிஸ் கொன்சாலெஸ் போன்றவர்களே தேசிய அணிக்குள் நுழைய முடிந்தது. ஏனையவர்கள் உயர்தரம் கொண்டிருந்தும் வசதி

# தன்னம்பிக்கை தருகிறார்

போலவே கிராமியப் பாடசாலைகள் தம் பயிற்சித்திட்டங்களில் பங்குகொள்ளப் பெரிதும் ஆர்வம் காட்டுகிறனர். ஆனால், இன்றைய உதைபந்தாட்ட வளர்ச்சிப் போக்கில் காலணிகள் **(Boots)** மற்றும் பொருத்தமான உடைகள் **(Jerseys)** அவசியமாக இருக்கின்றன.

ஆனால், இத்தேவைகளைப் பூர்த்தி செய்துகொள்ள முடியாத பொருளாதார வசதியின்மையால், அநேகமான பாடசாலைகள் இருப்பதைச் சுட்டிக்காட்டுகிறார். இதுகூட வளர்ச்சிக்குத் தடையாக இருக்கிறது என்பதை உணர்ந்துகொள்ள முடிகின்றது.

இங்கிலாந்து சென்றிருந்தபோது, தமிழ்ப் பாடசாலைகள் விளையாட்டுச் சங்கத்தினரிடம் **(TSSA)** இத்தகைய விடயங்கள் குறித்துக் கலந்துரையாடியதாகவும், அவர்கள் வாய்ப்புக்கள் இன்மையால், தேசியமட்டத்தில் பிரகாசிக்கும் சந்தர்ப்பத்தை இழந்தார்கள் என்பதையும் கூறி, அப்படியானநிலை இன்று எம்பாடசாலைச் சிறாருக்கு ஏற்பட்டுவிடக்கூடாது, என்கிறார்.

மேலும், அர்ப்பணிப்பு நிறைந்த பயிற்றுநர்கள் தேவை என்பதையும் கூறி, தனது யாழ். மாவட்டப் பயிற்றுநர் எம்.கே. மரியநாயகம், தேசியமட்டப் பயிற்றுநர் அல்பட் பெர்னாண்டோ இருவரையும் நன்றியுடன் நினைவுகூருகினறார்.

இன்றைய நிலையில், இலங்கை உதைபந்தாட்டச் சங்கம் சார்ந்த ஆனந்தராஜா, மணிலால் பெர்னாண்டோ இருவரும் யாழ். மாவட்ட உதைபந்தாட்ட வளர்ச்சிக்குச் செய்துள்ள பாரிய சேவைகள், மிகமிக நன்றியுடன் என்றும் நினைவுகூரப்படத்தக்கது என்கிறார் இவர்.

பாகிஸ்தான் உதைபந்தாட்ட அணி - யாழ். வரமறுத்த வேளையில், அதற்குப் பதிலாக மாலைதீவு அணியை யாழ். மண்ணில் கொண்டுவந்து நிறுத்திய பெருமை, மணிலால் பெர்ணாண்டோவைச் சாரும் எனக் கூறுகிறார் அந்தனிப்பிள்ளை.

நாங்கள் உரையாடிக் கொண்டிருந்தவேளையிலேயே, அளவெட்டி அருணோதயாக் கல்லூரி - கொழும்பு செல்வதில் நிதிப் பிரச்சினை ஏற்பட்டிருந்ததை அறிந்திருந்த மணிலால் பெர்ணாண்டோ, தொடர்புகொண்டு மொத்தச் செலவான 30 ஆயிரம் ரூபாவில், தனது பங்காக 15 ஆயிரம் ரூபா தருகிறேன் என்ற செய்தியைக் கூறினார்.

இன்றையநிலையில், ஏழையின் குடிசைவரை நுழையக் கூடியதும், விரும்பப்படுவதுமான உதைபந்தாட்டத்தில் மிகவும் கவலைக்குரிய விடயமாக - கைகலப்புகள், மத்தியஸ்தர்கள் தாக்கப்படுதல் போன்ற சம்பவங்கள் மிகுந்த வேதனை அளிக்கின்றன என்று குறிப்பிட்டோம்.

அதற்கு அவர் பதிலளிக்கும்போது, திறமையால் மட்டுமே அணிகள் கிண்ணங்களை வெல்லவேண்டும். அதற்குப் போதிய முறையான பயிற்சிகள் அவசியம்.

மேலும், கௌரவமானவர்களை உதைபந்தாட்டப் போட்டிக்கு அழைத்து, அகௌரவப்படுத்தும் பெயர்களில் ஈடுபடுதல் மிகவும் மனவருத்தத்திற்குரியது.

சில சந்தர்ப்பங்களில் சிறிய தவறுகள் ஏற்பட்டாலும் அவற்றைச் சகிக்கும், மன்னிக்கும், மறக்கும் மனப்பாங்கு அவசியம்.

சிலவேளைகளில், ஒரு சில விஷமிகளால் முழு ஆட்டம் குழம்புவதும், கழகத்துக்கு வீணான அவப்பெயர் ஏற்பட்டதுமுண்டு.

நாங்கள் சீருடை அணிந்தவர்களைப் பாதுகாப்புக்கு அழைத்து ஆட்டங்களை நடத்தாமல், நாமே எமக்கொரு வேலி போட்டுக்கொண்டால், மிகவும் கௌரவமாக இருக்கும், என்கிறார். உதைபந்தாட்ட வீரனாக, இவர் நிறையச் சாதனைகள் புரிந்துள்ளார்.

பல வெற்றிக் கிண்ணங்களை சென். அன்ரனீஸ் கழகம் வென்றபோது, அதன் அணித்தலைவராக இருந்திருக்கிறார்.


இன்று ஒரு பயிற்றுநராக உதைபந்தாட்ட வளர்ச்சியில் முக்கிய பங்காற்றிக் கொண்டிருக்கிறார். இவருடன் உரையாடிய நேரம் மிகவும் உபயோகமுள்ளதாக அமைந்தது.

**- நிர்மலன் -**

---

# அமெரிக்க ஓப்பனில் கண் வைக்கிறார்

அமெரிக்காவின் **WTA** லொஸ் ஏஞ்ஜல்ஸ் சுற்றுப் போட்டியில் - தரவரிசை இரண்டைக் கொண்ட லின்ட்ஸே



கிம் கிளிஜ்ஸ்டர்ஸ் அதிரடி உயர்ச்சி

டெவன் போர்ட்டை 6:1, 3:6, 6:1 என்ற செட் கணக்கில் கிம் கிளிஜ்ஸ்டர்ஸ் வென்று வெற்றிவாகை சூடியதுடன், உலகின் **RANK ONE** ரெனிஸ் தாரகையானார்.

இருபது வயதான கிளிஜ்ஸ்டர்ஸ் - ஸ்ரெபி கிராப், மொனிக்கா செலஸ் போன்ற முன்னைய முதற்தர வீராங்கணைகளுடன், தான் சேர்ந்துள்ளதை ஒப்பிடும்வேளை, நீண்டகாலம் அவர்களால் அந்தத் தரத்தில் தக்கவைத்துக் கொள்ளமுடிந்ததே, என்று அதிசயிக்கிறார்.

இவருடைய தரவரிசை உயர்ச்சி - செரினா வில்லியம்ஸ் காயமடைந்து, சில போட்டிகளில் விளையாட முடியாமற் போனதாலும், சாத்தியமாகி இருக்கலாம் என்றாலும், கிளிஜ்ஸ்டர்ஸ் ஒன்றும் குறைந்தவரல்ல.

செரினா வில்லியம்ஸ் ஐம்பத்தேழு வாரங்கள் தக்க வைத்திருந்த முதன்மைநிலையைக் கைப்பற்றிக் கொண்ட கிளிஜ்ஸ்டர்ஸ் **GRAND SLAM** வெல்லாவிட்டாலும் அவுஸ்திரேலிய ஓப்பன், விம்பிள்டன் போட்டிகளில் அரை இறுதிக் கப்பால் சென்றவர். பதினான்கு சுற்றுப்போட்டிகளில் பங்கு பற்றியவர்.

இவ்வருடம் ஆறு சுற்றுப்போட்டிகளில் வெற்றிக் கிண்ணம் வென்றவர். என்றாலும், இதுவரையில் **GRAND SLAM** வென்ற பதினொரு பேருக்குப் பின், இப்பொழுது **GRAND SLAM** பட்டங்கள் எதுவுமின்றி, கிளிஜ்ஸ்டர்ஸ் **RANK ONE** என்னும் உயர் இடத்தைப் பிடித்துள்ளார். **WTA** லொஸ் ஏஞ்சல்ஸ் சுற்றுப்போட்டியில் கிம் கிளிஜ்ஸ்டர்ஸ் பெற்றுக்கொண்ட பரிசுப் பணம், இலங்கை ரூபாவில் 97 இலட்சம் ரூபாவுக்குமேல். இதுதவிர, தரம் ஒன்று என்பதற்காக பெல்ஜிய மக்கள், நிறுவனங்கள் என்று இவருக்கு அள்ளிக் கொடுக்கப்போகின்றார்கள்.

பெல்ஜிய நாட்டு ரெனிஸ் விளையாட்டுக்கு, இப்போது வசந்தகாலம்போலத் தெரிகின்றது. முதன்முதலாக பெல்ஜிய நாட்டின் ரெனிஸ் வரலாற்றில் தரம் ஒன்று பெற்றுக் கொண்டது இதுவே முதல்முறை. பெல்ஜியத்துக்கும் முதல் முறை கிளிஜ்ஸ்டர்ஸ"க்கும் முதல்முறை. எல்லோருக்கும் மகிழ்ச்சிதான்.

**- ஜஸ்மின் -**

Sports Sports Sports Sports Sports Sports Sports Sports Sports Sports Sports Sports Sports Sports

# சிலவேளை அங்கும்

**LONDN GRAND PRIX** தடகளப் போட்டிகளில், கடந்த வெள்ளிக்கிழமை மாலையில் நடைபெற்ற - எல்லோராலும் எதிர்பார்க்கப்பட்ட 100 மீற்றர் ஓட்டப்போட்டி, உப்புச் சப்பில்லாமல் முடிவடைந்தது. எனினும், யாரோ ஒருவர் முன்னால் ஓடி இருப்பார்களல்லவா. அவர் ஐரோப்பிய 100M சாம்பியன் டுவெய்ன் சேம்பர்ஸ் தான். இந்த நிகழ்வு பல தடவைகளில் பதினைந்து நிமிடம் தாமதமாகவே ஆரம்பித்தது. முதலில் அமெரிக்க சாம்பியன் பேர்ணாட்



முதலிடம் பெறும் சேம்பர்ஸ்

வில்லியம்ஸ் தனது ஓட்ட ஆரம்பித்தலில் ஏற்பட்ட தடங்கலால், தாமதம் ஆரம்பிக்க, பிரித்தானிய வீரர் டரன் கம்பெல் வேறு காரணங்கள் காட்டினர். இதெல்லாம் முடிந்து, ஓட்டம் ஆரம்பித்ததும், மின்னியல் சாதனங்களின் உதவியுடன் நேரம் கணித்தல் ஆரம்பித்து, மத்தியஸ்தர்கள் தம் **STOP WATCH** மூலம் நேரம் கணிப்பதில் ஓட்டம் முடிவடைந்தது. இறுதியாக நேரக்கணிப்பைப் பார்த்த போது, முதலாம் இடம்பெற்ற டுவெய்ன் சேம்பர்ஸ் 9.56 செக்கன்களில் முதலிடம் பெற்றவராகக் கணிக்கப்பட்டார். இந்த நேரம் 100M போட்டிகளில் என்றாவது சாதனை நேரமாக வருமா என்பது சந்தேகம்தான்.



கெலிவைற் மரியனுக்குச் சவால்

இதற்கு முன்னதாக ரிம் மொண்ட்கொமரி, தானேவிட்ட தவறில், தகுதிகாண் போட்டியிலேயே ஆறாவதாக வந்தார். இதே வேளை, 100M ஓட்டத்தில் வென்ற சேம்பர்ஸ் கருத்துக் கூறும்போது- மொறிஸ் கிறீன் இல்லாத ஒரு குறையைத் தவிர, உலகின் அத்தனை 100M ஜம்பவனான்களுடனும் ஓடக் கிடைத்தது அற்புதமானது என்றார். அதுவும் இன்னும் இரண்டே வாரங்கள் மட்டும் பாரிஸ் சாம்பியன்ஷிப் தொடங்க இருக்கும் இவ்வேளையில், இந்தப் போட்டி மிகவும் முக்கியத்துவம் பெறுகிறது என்றார். எது எவ்வாறாயினும், இந்த 100M ஓட்டப்போட்டியின் நேரக் கணிப்பு உத்தியோக பூர்வமாகப் பாதிப்படையமாட்டாது என்பது முக்கியமானது.

மறுபுறம் பெண்கள் 100M ஓட்டத்தில் அமெரிக்காவின் கெலி வைற் - 10.93 செக்கன்களில் 100M ஓட்டத்தில் வெற்றி பெற்றார். இந்நிலையில், பாரிஸ் சாம்பியன்ஷிப் போட்டிகளில் மரியன் ஜோன்ஸ் கலந்துகொள்ளாதநிலையில், கெலி வைற் தான் தங்கம் வெல்வார் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது. இந்தப் போட்டியின் இரண்டாம் இடத்தை - முன்னாள் அமெரிக்கச் சாம்பியன் கிறிஸ்ரி

## நேரம் பிழைப்பதுண்டு

கெய்ன்ஸ் பெற்றுக்கொள்ள, அதிக எதிர்பாரப்புக்குள்ளாகி இருந்த உக்ரேன் நாட்டின் ஸன்னா புளொக் மூன்றாம் இடத்தையே பெறமுடிந்தது.

இதேவேளை, 9 நாட்கள் நடைபெறவிருக்கும் பாரிஸ் சாம்பியன்ஷிப் போட்டிகளுக்கான ரிக்கற்றுக்களில் தொண்ணூறு சதவீதமானவை, இரண்டு வாரங்களுக்கு முன்னதாகவே விற்றுத் தீர்க்கப்பட்டுவிட்டன. ஒவ்வொருநாளும் நடைபெறும் விழாவில், தினமும் பார்வையாளர்கள் அமரும் ஸ்ரேடியத்தின் ரசிகர் கொள்ளளவு 62,500 ஆகும். அப்படியாயின், ஒன்பது நாளும் பார்த்து ரசிக்கப்போகும் ரசிகர்கள் தொகை??


-சித்ரா-

# பட்டாலும் குற்றமடா படாவிட்டாலும் துக்கமடா

கிரிக்கெட் ஆடுகளங்கள் அமைக்கப்படும்போது, மைதானம் அமைந்துள்ள பிரதேசத்தின் தரைத்தோற்றம், காலநிலை ஆகிய அம்சங்கள் கருத்திற்கொள்ளப்படுவது யாவருமறிந்தவிடயம். ஆனால், கிரிக்கெட் ஆடுகளம் பொதுவாக யாருக்குச் சாதகமாக அமைந்திருக்கிறது என்பது மிகவும் இரகசியமானதாகத்தான் இருக்கும். ஆனால், போட்டி தொடங்கியவுடன், சில வேளைகளில் ஆடுகளம் எதிர்பார்த்ததற்கு மேலாக, சில மாற்றங்களைத் தருகின்றது என்றால், அந்த ஆடுகளம் ஏதோ மாற்றத்துக்கு உள்ளாக்கப்பட்டிருக்கின்றது, என்பது தான் உண்மை. சில வேளைகளில், சில பந்து வீச்சாளர்கள்-மத்தியஸ்தர்களால் எச்சரிக்கை செய்யப்படுவதைக் காண்கின்றோம். ஏன்? ஆடுகளங்களில் ஒரு பாதுகாப்பான பிரதேசம் ஒன்று உள்ளது. அது 2 அடி (60.96cm) அகலமானதும், 5 அடி (1.52m) நீளமான - ஒவ்வொரு விக்கெட்டிலிருந்தும் காணப்படுகின்ற ஒரு செவ்வகப்பிரதேசமாகும். இந்தப் பிரதேசத்துக்குள் பந்துவீச்சாளர் செல்வது தடைசெய்யப்பட்டுள்ளது. ஆனால், வேகப்பந்துவீச்சாளர்கள் தம்முடைய வேகப்பந்து வீச்சின்



ஜேம்ஸ் அன்டர்ஸன் - மத்தியஸ்தரால் தலையிடி




பொழுது, இந்தப் பிரதேசத்துக்குள் செல்லநேரிடும். இப்போது, அவர்கள் இந்த இடத்தை தங்களுடைய சப்பாத்துக் கால்களால் சேதப்படுத்தினால், நடுவர்களால் எச்சரிக்கை செய்யப்படுவார்கள். அண்மையில் தென்னாபிரிக்க அணியின் வேகப்பந்துவீச்சாளர் மக்காய நிற்றினி - இங்கிலாந்துடனான 3 ஆவது டெஸ்ட் போட்டியின்போது, நடுவர்களால் இரண்டுமுறை கடுமையாக எச்சரிக்கை செய்யப்பட்டார்.

அதேபோல, இங்கிலாந்து அணியின் வேகப்பந்துவீச்சாளர் ஜேம்ஸ் அன்டர்சன் - தென்னாபிரிக்காவுக்கு எதிரான முதலாவது டெஸ்ட் போட்டியின்போது, மைதான ஆடுகளத்தின் பாதுகாப்பான பிரதேசத்தினைச் சேதமாக்கிய குற்றத்துக்காக எச்சரிக்கை செய்யப்பட்டிருக்கிறார்.

இதில் ஒரு வேடிக்கை என்னவென்றால் - உலக கிரிக்கெட் வரலாற்றில், முதற்தடவையாக ஆடுகளத்தைச் சேதப்படுத்திய குற்றத்துக்காக - டெஸ்ட் போட்டி ஒன்றில் பந்துவீசத் தடைசெய்யப்பட்ட பந்துவீச்சாளர் யார் தெரியுமா? அவர்தான் - இந்திய அணியின் வேகப்பந்து வீச்சாளர் அசீஸ் நேஹ்ரா. சிம்பாப்வேக்கும் இந்தியாவுக்குமிடையிலான டெஸ்ட் போட்டியொன்றில், இரண்டாம் இனிங்ஸ் ஆட்டத்தில், மத்தியஸ்தரான கார்ப் பர்- இந்திய அணித்தலைவர் கங்கூலியிடம் நேஹரா பந்துவீச முடியாது என்று கூறியவுடன், இந்திய அணி மிகவும் குழம்பியது நினைவிருக்கலாம்.

உண்மையில், இந்தப் பாதுகாப்பான பிரதேசம் என்றால் என்ன? இது போட்டிமுழுவதும் ஆடுகளத்தினை ஒரே சீராக வைத்திருப்பதற்கு இந்தப் பிரதேசம் மிகவும் உதவிபுரிகின்றது.

ஆரம்பகாலத்தில் பந்தைச் சேதப்படுத்தி, தமக்கு ஏற்றவாறு பந்து வீசி விக்கெட்டுக்களை அள்ளிய பந்து வீச்சாளர்கள் - அந்தப் பாச்சா பலிக்காத காரணத்தினால், இந்தப் பாதுகாப்பான பிரதேசத்தினைச் சேதப்படுத்தி, விக்கெட்டுக்களைப் பெற்றுக்கொள்ளத் துடிக்கின்றனர்.

ஆனால், மத்தியஸ்தர்களுடைய கழுகுக் கண்களுக்குள் அவர்கள் சிக்கிப் பாதிப்படைகின்றார்கள். ஒருபுறம் பந்துவீசும் வேகப்பந்துவீச்சாளர்கள் நன்கு அந்தப் பக்கத்தினைச் சேதப்படுத்துகின்றார்கள். இதனால், என்ன நன்மை? மறுபுறம் பந்துவீசும் சுழற்பந்து வீச்சாளர்கள் அதிகளவு விக்கெட்டுக்களைப் பெறுவதற்கு இதுதான் காரணம்.

வேகப்பந்து வீச்சாளர்கள் தோண்டிய சிறுகுழிகளில் சுழல் பந்துவீச்சாளர்கள் பல்லாங்குழி ஆடி, விக்கெட்டுக்களைப் கைப்பற்றிக் கொள்கின்றார்கள். இந்த ஆட்டத்திலே முதற்தரமான ஜோடி அவுஸ்திரேலிய அணியின் கிலென் மக்ராத் - ஷேர்ன் வோர்ன் ஆகும். அதேபோல், இலங்கை அணியின் சமிந்தவாஸ் - முரளிதரன் ஜோடியும் பெயர்போனது. முதற்தடவை பந்து வீச்சாளருக்கு மத்தியஸ்தர் எச்சரிக்கை செய்வார். அடுத்த தடவை கடைசியான எச்சரிக்கை, இறுதியில் அவர் பந்துவீசாமல் தடைசெய்யப்படுவார். அதிகமான வேகப்பந்துவீச்சாளர்கள் இந்தப் பிரதேசத்திற்குள் நுழையாமல், பந்துவீச முனைந்து தம்முடைய பந்துவீச்சுத் திறமையைப் பாழாக்கிக் கொண்டிருக்கின்றார்கள். உண்மையில், நேர்மையற்ற முறை மூலம் விக்கெட்டுக்களைப் பெற முனைபவர்களுக்கு இது அடிதான்.


ப.சுதர்சன்

# இந்தப் போக்கு வெட்கமானது

உலகப் போதை ஒழிப்பு நிறுவனம் (**WADA**) தனது வேலையைப் பார்க்கட்டும் என்கிறார். ஊக்கமருந்துப் பாவனையால் குற்றவாளியாக நிரூபிக்கப்பட்டு, ஒரு வருடம் கிரிக்கெட் விளையாடத் தடைவிதிக்கப்பட்டிருக்கும் ஷேன்வோண் - ஆரம்பத்தில் (**ACB**) அவுஸ்திரேலிய கிரிக்கெட் சபையின் எதுவித கிரிக்கெட் போட்டிகளிலும் விளையாடத் தடைவிதிக்கப்பட்டிருந்த ஷேன் வோண், அண்மையில் பொதுநோக்கு நிதி சேகரிப்பு (**CHARITY GAMES**) ஆட்டங்களில் ஆடாமல் என்று, **ACB** இனாலேயே அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இதனையே **WADA** நிறுவனம் - நியாயமற்ற, முறையற்றசெயல் எனக் கண்டித்துள்ளது. ஷேன்வோண் விளையாடலாம், பயிற்றுவிக்கலாம். கிரிக்கெட் தொடர்பான நிகழ்வுகளில் கலந்துகொள்ளலாம் என்றால், தடை என்று ஒன்றை விதிப்பதில் என்ன பிரயோசனம் இருக்கமுடியும் என்கிறது **WADA**. ஆனால், அவுஸ்திரேலிய கிரிக்கெட் சபையின் தலைவர் ரிம்மேயும் - வோணுக்கு ஆதரவாகவே கருத்துக் கூறுகிறார்.

இந்தத் துணிவில் "பரமசிவன் கழுத்திலிருந்து கருடா சௌக்கியமா" என்று கேட்கும் பாணியில், ஷேன்வோண் கருத்துக் கூறியிருக்கிறார். வேறுபல விளையாட்டுத் துறைகளில் ஊக்கமருந்து பாவித்த குற்றத்துக்காகப் பதக்கங்களை மீளப்பெறல், நீண்டகாலத்தடை, ஆயுட்காலத் தடை என்றெல்லாம் தண்டனைகள் வழங்கப்பட்டுக் கொண்டிருக்க, கிரிக்கெட் ஜாம்பவான் என்றரீதியிலோ, பலம் வாய்ந்த நிறங்கொண்டவர் என்றரீதியிலோ தெரியவில்லை. ஷேன் வோண் செல்லப்பிள்ளையாக நடத்தப்படுகிறார் போலத் தெரிகின்றது. அவுஸ்திரேலிய கிரிக்கெட் சபையின் இந்தப் போக்கு எதிர்காலத்தில் நிறைய அவுஸ்திரேலிய வீரர்களுக்கு வேறு வகையான சிந்தனைகளைக் கொடுக்கக்கூடும். அது அவுஸ்திரேலிய கிரிக்கெட்டின் வீழ்ச்சிக்கும் காரணமாக அமையக் கூடும்.



ஷேன் வோண் திமிர் அதிகம்தான்

தற்போது தரவுகளின்படி, அவுஸ்திரேலிய விளையாட்டுகளில் முதன்முறையாகக் கிரிக்கெட்டுக்கான முதலிடத்தை உதைபந்தாட்டம் பெற்றுக் கொண்டு, அவுஸ்திரேலியாவின் மிகப் பிரபல்யமான விளையாட்டான கிரிக்கெட்டை இரண்டாம் இடத்துக்குத் தள்ளிவிட்டது. இதற்கு தூரகிழக்கில் நடைபெற்ற 2002 உலகக் கால்பந்தாட்டப் போட்டிகள் ஒரு காரணம். மேலும், கிரிக்கெட் ஆடப்படும் நீண்டநேரம் - உதைபந்தாட்டத்தின் மீது மிகுந்த கவர்ச்சியை ஏற்படுத்திவிட்டது. இனிவரும் காலங்களில் முதலிடத்தைக் கிரிக்கெட் பெறுமோ என்பதும் கேள்விக்குறி. இந்நிலையில் தனிநபர் ஆதிக்கம் ஒழுக்கக்கேடுகளுக்கும் - உரிய தரப்பால் பாதுகாப்பு அளிக்க முற்பட்டால், கிரிக்கெட் வேகமாக அழியும் என்பதில் சந்தேகம் இல்லை.

-வெரோனிக்கா-

# தொடர் கதைதானா?

**1988** இல் 100M ஓட்டத்தில் ஒலிம்பிக் தங்கப்பதக்கம் வென்று,
போதைப்பொருள் பாவித்த குற்றச்சாட்டின்பேரில், ஒரு சில
நீக்கப்பட்டார்.
இப்போது இன்னொரு முக்கியமான தடகளப் போட்டியொன்றில்-
தங்கப்பதக்கத்தை இழந்து நிற்கிறார். இவர்தான் மட்டுமல்ல,
துரோகமிழைத்துவிட்டார். **4x100M** தங்கத்தை அமெரிக்கா
கூறிய காரணத்தினால், அந்தத் தங்கப்பதக்கமும்
யில், 100M ஓட்டத்தில் ஜமெய்க்காவின் மைக்கல்
கனடாவின் ஹென்றி ஆகியோர் முதல் மூன்று
கிறார்கள். அஞ்சலோட்டத்தில் பிறேசில் முதல்
இடத்துக்கும், கியூபா மூன்றாம் இடத்துக்கும்
இதேவேளை, 800 M பெண்கள் நிகழ்வில்
ஊக்கமருந்து பாவித்தமை நிரூபணமாகியதைத் தொடர்ந்து,
வழியில் பார்த்தால், ஊக்கமருந்துப் பாவனை என்பது
துள்ளது போலவே தோன்று கின்றது. என்றாலும், சில
பாதிக்கும் என்று தெரியாத நிலையிலேயே, இத்த
குறிப்பிட்டிருக்கிறார்கள். மிக்கியும் அவ் வாறனதொரு
தடகள வீரர்கள், தமது வைத்தியரின் ஆலோசனை
ணங்கள் நொண்டிச் சாட்டாகவே இருக்கும் என்கிறார்

- ராஜ்குமார்.

கனடாவின் பென்ஜோன்சன் - ஊக்கமாத்திரை
மணிநேரத்திலேயே அந்தத்தகுதியில் இருந்து

அமெரிக்கரான மிக்கி கிரிம்ஸ் 100M
தனது அஞ்சலோட்டக்குழுவிற்கும்
வென்றிருந்தது. ஆனால், ஏற்கனவே
மீளப்பெறப்பட்டுவிட்டது. இந்த நிலை
பிரெட்ஸ், அமெரிக்க மார்செலாஸ்கேல்,
இடங்களையும் பெற்றுக்கொண்டிருக்
இடத்துக்கும், ரினிடாட்டுபாகோ இரண்டாம்
உயர்த்தப்பட்டுள்ளது.
தங்கம் வென்ற சூரிணாமின் லெட்டிஸ்டா வெரிடி-
தங்கப்பதக்கத்தை இழந்து நிற்கிறார். ஒரு
ஒரு நோயாக விளையாட்டுத்துறையைப் பீடித்
மருந்து வகைகள் - எந்தவகையில் தங்களைப்
வறுகள் நேர்ந்து விடுவதாகத் தடகள வீரர்கள்
கருத்தையே கூறியுள்ளார். ஆனால், பிரபலமான
யின்படியே செயற்படுவதால், இப்படியான கார
கள் விமர்சகர்கள்.



மிக்கி - தப்பிக்கமுடியாது

நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanadu.com

**சிந்தனைக்கு**
*சிறுமையும் செல்லாத் துனியும் வறுமையும்
இல்லாயின் வெல்லும் படை.*
*திருக்குறள்.*

# நமது நோக்கு

## அமைதிக்கான பணியல்ல

முப்படைகளையும் சேர்ந்த படையினருக்கான சம்பளங்களை அதிகரிப்பதற்கு அரசாங்கம் தீர்மானித்திருக்கிறது. 2000 ஆம் ஆண்டு நியமிக்கப்பட்ட சம்பள ஆணைக்குழுவின் பரிந்துரைப்படியே 55 சதவீத சம்பள உயர்வை முப்படையினருக்கும் வழங்குவதற்கு அரசாங்கம் தீர்மானித்திருக்கிறது.

அடுத்த மாதம் முதல் இந்தச் சம்பள உயர்வு நடை முறைப்படுத்தப்படவுள்ளமை, குறிப்பிடத்தக்கது. இன்று ஆரம்பமாகும் இராணுவத்துக்கான பாரிய ஆட்சேர்ப்பு முயற்சிகளின் ஒரு கட்டமாகவே, இந்தச் சம்பள உயர்வு அதிகரிப்புப் பற்றிய செய்தி வெளியிடப்பட்டிருக்கிறது.

ஏனைய அரச ஊழியர்களுக்கு சம்பள உயர்வு வழங்க அரசு பின்னடித்து வருகின்றது. ஐந்து சதவீத சம்பள அதிகரிப்புக்கோரி நடத்தப்பட்ட ஊழியர் வேலை நிறுத்தங்களையே கண்டுகொள்ளாமல் இருந்துவந்த அரசாங்கம் திடீரென முப்படையினரின் சம்பளங்களை மட்டும் உயர்த்துவதற்கு தீர்மானித்திருப்பது சாதாரணமான விடயமல்ல.

முப்படையினருக்கு ஐந்து சதவீதமோ, பத்து சதவீதமோ சம்பள உயர்வுகளை வழங்குவது ஒன்றும் பெரியவிடயமாகத் தெரியாது. ஆனால், முப்படையினருக்கு 55 சதவீதச் சம்பள அதிகரிப்பு அடுத்த மாதம் முதல் வழங்கப்படவுள்ளது.

அண்மையில் - நாடு முழுவதும் உள்ள மருத்துவர்கள், இருபது சதவீத சம்பள உயர்வு கோரிப் போராட்டம் நடத்தியபோது, ஒருவாரத்துக்கு மேலாக அதையிட்டு - அரசு கண்டும் காணாமல் இருந்தது.

இருபது வீத சம்பள அதிகரிப்பைக் கொடுக்க எத்தனை கோடி ரூபா தேவை எனக் கணக்குப் பார்த்து, மருத்துவமனைகளில் பெரும் சுகாதார நெருக்கடிகள் ஏற்பட்டபின்னர்தான் அரசு இறங்கி வந்தது.

ஆனால், முப்படையினருக்கு மட்டும் - அவர்கள் தரப்பிலிருந்து சம்பள உயர்வுக் கோரிக்கை எதுவும் எழாமலேயே, சம்பள அதிகரிப்பு - அதுவும் 55 வீத அதிகரிப்பு வழங்கப்பட்டிருந்தது. நாட்டிலுள்ள மருத்துவர்களின் மொத்த எண்ணிக்கை சில ஆயிரங்களாகத்தான் இருக்கும்.

ஆனால், தற்போது அரசு முப்படையினருக்கும் வழங்க உத்தேசித்துள்ள 55 வீத சம்பள உயர்வு சுமார் ஒன்றரை லட்சத்துக்கும் அதிகமானோருக்கு வழங்க வேண்டியிருக்கும். இதனால், பாதுகாப்பு செலவினம் மேலும் அதிகரிக்கும் வாய்ப்புக்கள் தோன்றியுள்ளன.

சமாதானகாலத்தில் படையினருக்கான சம்பள அதிகரிப்புக்களை வழங்கி ஆசைகாட்டுவதும், பெரியளவிலான ஆட்சேர்ப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வதும், அரசின் நடவடிக்கைகள் மீது - சமாதானத்தை விரும்பும் மக்கள் மத்தியில் நம்பிக்கையீனத்தை தோற்றுவித்துவருகின்றது.

முப்படைகளையும் பொறுத்தவரையில் கடந்த இருபதாண்டு கால யுத்தம் அவர்களைப் பெரிதும் களைப்படையச் செய்துவிட்டதென்பதில் சந்தேகமில்லை. யுத்தத்தில் வெற்றிபெறமுடியாது என்று படையினர் உணரும் கட்டத்தில்தான் - அரசாங்கம் இனியும் யுத்த மார்க்கத்தில் செல்வது ஆபத்தானது என்று தீர்மானம் எடுத்து, சமாதானப் பாதைக்கு மாறியது.

ஆனால், சமாதானப் பயணம் ஒருபுறம் தொடர்ந்து கொண்டிருக்க, அரசாங்கம் மீண்டும் இராணுவத்தைப் பலப்படுத்தும் நடவடிக்கைகளில் ஈடுபட்டிருக்கின்றது.

படைகளைப் பலப்படுத்தும் இந்த நடவடிக்கைகளை, முற்றுமுழுதாக வழமையான செயற்பாடுகள் என்று கூறி ஒதுக்கித் தள்ளிவிடமுடியாது. காரணம் என்னவென்றால், போரில்லாத ஒரு இயல்பான சூழலுக்கு - தற்போதுள்ள படையினரின் எண்ணிக்கையே - இலங்கை போன்றதொரு நாட்டுக்குத் தேவையில்லை.

இப்போதே தம்மிடம் உள்ள படைகளை எவ்வாறு விருத்தி செய்யலாம்? சர்வதேச தரத்துக்கு எப்படி மாற்றியமைத்து ஐ.நாவின் சமாதானச் செயற்பாடுகளில் ஈடுபடுத்தலாம்? என அரசு சிந்தித்துவருகின்றது.

இவ்வாறான சூழலில் மேலும் தனது படைகளை- ஆளணி வள ரீதியாக வலுப்படுத்த முயல்வதானது, வழமையானதொரு செயற்பாடு எனச் சொல்லமுடியாது. இராணுவத்தைப் பலப்படுத்த, நவீனமயப்படுத்த எடுக்கும் ஒரு முயற்சியாகவே தெரிகிறது.

இத்தகைய பலப்படுத்தல்கள் சமாதான காலத்தில் மேற்கொள்ளப்படுவது - நிச்சயமாக அமைதிக்கான பணியாக இருக்கப்போவதில்லை என்பது மட்டும் உண்மை.

# சமாதான நடவடிக்கைகளுக்கு இந்திய அரசின் உதவி; தமிழ் காங்கிரஸ், மக்கள் ஐக்கிய முன்னணி வரவேற்பு!

(கொழும்பு)

நாட்டில் சமாதான நடவடிக்கைகளுக்குத் தேவை ஏற்படின், இந்திய அரசின் ஒத்துழைப்பு பெறப்படும் என, அரசாங்கம் அறிவித்துள்ளதற்கு தமிழ்க் காங்கிரசும், மக்கள் ஐக்கிய முன்னணியும் வரவேற்புத் தெரிவித்துள்ளன.

தற்போது முன்னெடுக்கப்படும் சமாதான நடவடிக்கைகளுக்கு இடையூறு ஏற்படாத வகையில், இந்தியாவின் ஒத்துழைப்பு பெறப்படவேண்டும் என, அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான அப்பாத்துரை விநாயகமூர்த்தி தெரிவித்துள்ளார்.

இந்தியாவின் ஒத்துழைப்பு அவசியம் என்று தமிழீழ விடுதலைப் புலிகளும் தெரிவித்துள்ளனர். இன்றைய சமாதான சூழ்நிலையில் சர்வதேச நாடுகள் அதிகளவில் பங்களிப்பு செய்வது அவசியம் என்றும் அவர் கூறியுள்ளார்.

இதேவேளை, இலங்கையின் இறைமை பாதுகாக்கப்படவேண்டுமானால், இந்தியாவின் ஒத்துழைப்பு அவசியம் என, மக்கள் ஐக்கிய முன்னணியின் தலைவர் தினேஷ் குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

அமைச்சரவைத் தீர்மானங்களை வெளியிடும் பொருட்டு, கடந்தவாரம் நடத்தப்பட்ட செய்தியாளர் மாநாட்டில் சமாதான முயற்சிக்குத் தேவை ஏற்படின், இந்தியாவின் ஒத்துழைப்பு பெறப்படும் என்று, அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் குறிப்பிட்டிருந்தது தெரிந்ததே.

### அளவெட்டிப் பகுதியில்

## கலாசார சீரழிவில் ஈடுபட்டோரை பொதுமக்கள் மடக்கிப் பிடித்தனர்

(அளவெட்டி)

சமூகசீரழிவை உண்டுபண்ணக் கூடியவிதத்தில் செயற்பட்ட இளைஞர்கள் மூவர், பொதுமக்களால் மடக்கிப் பிடிக்கப்பட்டனர்.

மேற்படி சம்பவம் அளவெட்டிப் பகுதியில் இடம்பெற்றுள்ளது. கலாசாரத்தைக் கெடுக்கும் வகையிலான நடவடிக்கையில ஈடுபட்ட மூவரை, அப்பகுதியிலுள்ள பொதுமக்கள் சுற்றிவளைத்துக் கையும் களவுமாகப் பிடித்துள்ளனர்.

பிடிக்கப்பட்ட மூவரையும் பொதுமக்கள் கலாசாரத்தைப் பேணும் குழுவினிடம் ஒப்படைத்தனர். அவர்களை விசாரித்த கலாசார பேணும் குழுவினர் - எச்சரிக்கை செய்து விடுவித்தனர்.

## அரசாங்கம் விடுத்திருந்த கோரிக்கைக்கு எதிர்க்கட்சி கொள்கையளவில் இணக்கம்!

(கொழும்பு)

அரச திணைக்களங்களில் மேலாய்வு நடவடிக்கை செய்யும் குழுக்களுக்கு - எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் தலைமை வகிக்கவேண்டும் என்ற அரசின் கருத்துக்குக் கொள்கையளவில் எதிர்க்கட்சி இணக்கம் தெரிவித்துள்ளது.

ஜனாதிபதி தலைமையில் எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களில் ஒன்றுகூடி எடுத்த தீர்மானத்திற்கு, எதிர்க்கட்சி உறுப்பினர்கள் ஒருமித்த கருத்தைத் தெரிவித்துள்ளனர்.

அரசதிணைக்களங்களுக்கான பரிந்துரைகளில் - தங்கள் கட்சியின் கொள்கைகள் என்ன என்பதை அரசு சமர்ப்பிக்க வேண்டும் எனவும் இணக்கம் காணப்பட்டது.

# உயர் தொழில்நுட்ப நிறுவனம் அமைக்க நிரந்தர காணி தெரிவுசெய்யப்பட்டுள்ளது!

யாழ்.உயர் தொழில்நுட்பக் கல்லூரிக்கு நிரந்தரக் கட்டடம் அமைப்பதற்கான காணி தெரிவுசெய்யப்பட்டுள்ளது. இதற்கான அனுமதியை யாழ். செயலகம் நிறுவன நிர்வாகத்திடம் வழங்கியது.

உயர் தொழில்நுட்பக் கல்லூரிக்கான காணித் தெரிவினை- கைதடி, நாவற்குழி, அரியாலை ஆகிய அரசகாணிகளில் மேற்கொள்ளும்படி யாழ் செயலகம், நிர்வாகத்திடம் கோரிக்கை விடுத்திருந்தது. இதனடிப்படையில் உயர் தொழில்நுட்ப நிறுவனத்தினர், தமது முதற்தெரிவாக அரியாலையையும், 2 ஆம் தெரிவாகக் கைதடியையும், மூன்றாம் தெரிவாக நாவற்குழியையும் தெரிவுசெய்திருந்தனர்.

அரியாலையில் பொன்னம்பலம் வீதிக்கு அண்மையிலுள்ள நூற்று பரப்புக் காணியை, நிறுவனம் அமைப்பதற்காக நிர்வாகம் தெரிவுசெய்திருக்கிறது.

1995 ஆம் ஆண்டுவரை தொழில்நுட்பக் கல்லூரியுடன் இயங்கிய உயர் தொழில்நுட்ப நிறுவனம் - 1995 இல் திருநெல்வேலி முத்துத்தம்பி வித்தியாலயத்தில் இயங்கியது. பின்னர், 1998 இலிருந்து பலாலி வீதியிலுள்ள தனியார் கட்டடம் ஒன்றில் இயங்கிவருகின்றது. அந்தக் கட்டடத்துக்கான ஒப்பந்த காலம் இந்த வருடத்துடன் முடிவடைகின்றமை குறிப்பிடத்தக்கது.

அண்மையில், தமக்கு நிரந்தரக் காணி ஒன்றை வழங்குமாறுகோரி - நிர்வாகத்தினரும் மாணவர்களும் ஆர்ப்பாட்டம் மேற்கொண்டு, அதன் முடிவில் யாழ். செயலகத்தில் மகஜர் ஒன்றைக் கையளித்திருந்தது அனைவரும் அறிந்ததே.

### மன்னார் மாவட்டத்தில்

## மனித மண்டையோடு ஒன்றும் பண்டைய நாணயங்களும் மீட்பு!

மன்னாரில் மனித முகத்துடன் கூடிய மண்டை ஓடு ஒன்றும், சில நாணயங்களும் கண்டெடுக்கப்பட்டுள்ளன. மன்னார் - சவுத்பார், சாந்திபுரம் பகுதியிலுள்ள புதிய குடியேற்றத்திட்டத்தில், மக்கள் மண் அகழ்வு செய்யும்போதே - இந்த மண்டையோடும், நாணயங்களும் கண்டெடுக்கப்பட்டுள்ளன.

நேற்றுக்காலை, சாந்திபுரம் குடியேற்றத்திட்டத்திலுள்ள மணல்மேடு ஒன்றில், மக்கள் மண் அகழ்வு செய்தபோதே - இப்பண்டைய பொருட்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. மனித உருவமுடைய இந்த மண்டையோட்டில் பற்களுமுள்ளது. அத்துடன், இதில் கைவைத்தவுடன் நொருங்கி துகளாவதையும் காணமுடிகின்றது. கண்டெடுக்கப்பட்ட நாணயங்கள் பாண்டியர் காலத்திற்குரியனவாக இருக்கலாமெனக் கருதப்படுகின்றது.

இதனையறிந்து அப்பகுதிக்கு வந்த மன்னார் பொலிஸார், அதனைச் சுற்றிப் பாதுகாப்பினை மேற்கொண்டதோடு - புதைபொருள் ஆராய்ச்சி திணைக்களத்திற்கும் அறிவித்துள்ளனர். புதைபொருள் ஆராய்ச்சியாளர்கள் வந்து, இதனைப் பார்வையிடவுள்ளதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இவை கண்டெடுக்கப்படுவதற்கு சிலநாட்களின் முன்னர் இந்த மண்மேட்டினை ஒருவர் தோண்டியபோது, ஒரு மண்தாழியைக் கண்டெடுத்துள்ளார். அதற்குச் சிலநாட்களின் பின், வேறொருவர் தோண்டியபோது, பல செப்பு நாணயங்களை எடுத்ததுடன், அதனைக் கொழும்பு கொண்டு சென்று, ஒரு கிலோ 600 ரூபாய்க்கு விற்றுள்ளார் எனத் தெரியவருகிறது.

## சம்மாந்துறையில் ஹக்கீமிற்கு கறுப்புக்கொடி காட்டி எதிர்ப்பு

சம்மாந்துறைப் பகுதியில் நேற்றுமுன்தினம் காலை நடைபெற்ற வைபவமொன்றில் - கலந்துகொள்ளச் சென்ற துறைமுகங்கள் கப்பற்துறை அபிவிருத்தி மற்றும் கிழக்கு அபிவிருததி அமைச்சர் ரவூப் ஹக்கீமுக்கு எதிர்ப்புத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இப்பகுதியில் நடைபெற்ற பத்து அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பான நிகழ்வில் கலந்துகொண்டபோதே, இந்த எதிர்ப்புக் காட்டப்பட்டுள்ளது.

கல்முனை - அக்கரைப்பற்று பிரதான வீதியில் கறுப்புக் கொடிகள் கட்டப்பட்டும், ரயர்கள் போட்டு எரிக்கப்பட்டும் எதிர்ப்புத் தெரிவிக்கப்பட்டது.

இதனால், அப்பகுதியில் பெருமளவு பொலிஸார் குவிக்கப்பட்டிருந்ததுடன், பிறபகுதிகளிலிருந்தும் பொலிஸார் பெருமளவில் குவிக்கப்பட்டு, பாதுகாப்பு ஏற்பாடுகள் அதிகரிக்கப்பட்டிருந்தன. ஹக்கீமிற்கு எதிரான மாற்று முஸ்லிம் குழுவினரின் ஏற்பாட்டிலேயே, இந்த எதிர்ப்பு நடவடிக்கை இருந்ததாகவும் தெரிவிக்கப்படுகின்றது. இதன்போது கறுப்புக்கொடி கட்டப்பட்டதுடன், வீதிகளில் ரயர்கள் எரிக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

### குரங்குப்பாஞ்சான் விவகாரத்தில்

# கண்காணிப்புக்குழுவின் நிலைப்பாட்டை எரிக் சொல்ஹெய்ம் ஆதரிக்கிறாராம்!

### கண்காணிப்புக்குழு பேச்சாளர் தகவல்

குரங்குப்பாஞ்சான் முகாம் விடயத்தில், யுத்தநிறுத்தக் கண்காணிப்புக்குழுவினர் கொண்டுள்ள நிலைப்பாட்டை, பூரணமாக ஆதரிப்பதாக நோர்வேயின் விசேட சமாதானத் தூதுவர் எரிக் சொல்ஹெய்ம் தெரிவித்துள்ளார் என, கண்காணிப்புக்குழுவின் பேச்சாளர் அக்னஸ் பிறகர் டோட்ரயர் தெரிவித்துள்ளார்.

யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் பிரதித்தலைவர் ஹொக்லண்டுடன், நேற்றுமுன்தினம் நடத்திய பேச்சுவார்த்தையின்போது, சொல்ஹெய்ம் இவ்வாறு குறிப்பிட்டதாக அவர் கூறினார்.

தமிழீழ அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனுடன் கிளிநொச்சியில் நடத்திய கலந்துரையாடல் பற்றி இந்தப் பேச்சுவார்த்தையின்போது, சமாதானத் தூதுவர் எரிக் சொல்ஹெய்ம் விரிவாக விளக்கியுள்ளார்.

அந்த முகாம் விடயத்தில் விடுதலைப் புலிகள் தொடர்ந்தும் ஒரே நிலைப்பாட்டில் இருப்பதாக, அவர் கூறியுள்ளார்.

இந்தப் பிரச்சினைக்குத் தீர்வுகாணும் பொறுப்பு நோர்வே அரசின் கைகளிலேயே இருப்பதாகவும், நோர்வே, இலங்கை அரசு, விடுதலைப் புலிகள் ஆகிய மூன்று தரப்பினரும் ஒரே முடிவாக முடிவுக்கு வரவேண்டியுள்ளதாகவும், கண்காணிப்புக்குழுவின் பேச்சாளர் மேலும் தெரிவித்தார்.

# அடுத்த தேர்தல் ஒன்றைச் சந்திக்க தயாராகும் ஐக்கிய தேசிய முன்னணி

**தெற்குத் திசையினிலே......**

**கொழும்பிலிருந்து இந்திரஜித்**

இலங்கையின் சமாதான முன்னெடுப்புக்கள் தொடர்கின்ற போதிலும், நகர்வுகள் இன்னும் ஸ்தம்பித்தே இருக்கின்றன. இலங்கை அரசாங்கம் சமர்ப்பித்திருக்கும் இடைக்கால திட்டவரைபு தொடர்பாக, தமிழீழ விடுதலைப் புலிகள் பாரிஸில் ஆராய்ந்து, அளிக்கப்போகும் பதிலில்தான் இலங்கையின் அடுத்த கட்டச் சமாதான நகர்வுகள் ஆரம்பிக்கப்போகின்றன. அரசாங்கம் சமர்ப்பித்திருக்கும் இடைக்காலத் திட்டவரைபு சம்பந்தமாக, தமிழீழ விடுதலைப் புலிகள் தற்சமயம் ஆராய்ந்து வரும்



அதேநேரம், அவர்களும் சாதகமான பதில் ஒன்றையே அளிப்பர் என்ற எதிர்பார்ப்பே அனைவர் மத்தியிலும் எழுந்துள்ளது. இலங்கையின் சமாதானம் மிக நீண்டபாதையில் செல்லவேண்டிய ஒன்று. அந்தப் பாதையில் மிகவும் கரடுமுரடான தடைகள் காத்திருக்கின்றன. உள்ளூரிலும், வெளிநாடுகளிலும் இலங்கையின் சமாதானத்துக்கு ஆதரவளிக்கப்பட்டுவரும் அதேவேளை - அதற்கு சமமான நிலையில் எதிர்ப்பு நடவடிக்கைகளும் முனைப்புப்பெற்று வருகின்றன. இலங்கையில் இனப்பிரச்சினை ஒன்று இருப்பது அனைவரும் அறிந்த விடயம். ஆனால், அதனை இனப்பிரச்சினை இல்லையென மறுதலித்தமை காரணமாகவே, இன்று இனப்பிரச்சினை உள்ளூர்ப் பிரச்சினை மாத்திரமல்ல, சர்வதேச மட்டத்திலும் பேசப்பட்டு வரும் பிரச்சினையாக மாறியுள்ளது.

அத்துடன், இலங்கைப் பிரச்சினை தீர்க்கப்பட்டால்தான், தமது நாட்டில் நிம்மதி என்ற அளவிற்கு, சர்வதேச நாடுகள் நிலைப்பாடு ஒன்றுக்கு வந்துள்ளன. எனினும், இவ்வாறான நாடுகளுக்கு மத்தியில் இலங்கை இனப்பிரச்சினை தற்போதைய முனைப்புக்கு மத்தியில் தீர்க்கப்பட்டால், அது தனது நாட்டின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக மாறிவிடுமோ என்ற அச்சம், அயல்நாட்டிற்கு இல்லாமலில்லை. இந்த அச்சம் நியாயமானதே. ஏனெனில், அமெரிக்கா, நோர்வே போன்ற மேற்கு உலக நாடுகளும், ஜப்பானும் இலங்கை இனப்பிரச்சினையில் தலையிட்டு, இனப்பிரச்சினை தீருமாக இருந்தால், அந்த நாடுகளின் செல்வாக்கு ஆசியப்பிராந்தியத்தில் அதிகரிக்கும் வாய்ப்புண்டு.

ஏற்கனவே அமெரிக்கா பல ஆசிய நாடுகளில், ஏதோ ஒருவகையில் தனது செல்வாக்கைச் செலுத்தி வருகிறது. அதே செல்வாக்கு இலங்கை இனப்பிரச்சினையின் தற்போதைய முன்னெடுப்பின்மூலம் தீருமாகவிருந்தால், அது அமெரிக்காவின் செல்வாக்கை ஆசியப்பிராந்தியத்தில் மேலும் பாரியளவில் உயர்த்திவிடக்கூடும். எனவேதான் - இந்த விடயத்தில் அண்டைநாடான இந்தியா மிகவும் அச்சப்படுகின்றது. இந்தியா ஏற்கனவே- இலங்கை இனப்பிரச்சினையில் நேரடியாகத் தலையிட்டு, அதன் காரணமாகப் பல அனுபவங்களைப் பெற்றுக்கொண்ட நாடாகும்.

அந்த அனுபவம் இந்தியாவை மீண்டும் ஒருமுறை இலங்கை இனப்பிரச்சினையில் நேரடியாகத் தலையிடுவதை தவிர்க்கச் செய்திருக்கிறது. ஆயினும், அதன் நேரடித் தலையீட்டுக்கு அப்பால், தலையீடே இல்லாத நிலையில், இலங்கை இனப்பிரச்சினையைத் தீர்க்கமுடியாது என்பதும் யதார்த்தமான உண்மையே.

இந்தியா - இலங்கையைப் பொறுத்தவரையில் அண்டைநாடு என்பதைக் காட்டினாலும், வரலாற்றுரீதியாக நெருங்கிய உறவைச் சமய, சமூகரீதியில் கொண்டமை காரணமாக, இந்தியாவின் தலையீடு மிகவும் அவசியமானதாகவே இலங்கையின் ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கமும், தமிழீழ விடுதலைப் புலிகளும் கருதுகின்றனர்.

தமிழீழ விடுதலைப் புலிகளும், ஐக்கிய தேசியக்கட்சி அரசாங்கமும், இந்தியாவின் மிக முக்கிய பங்கை இனப்பிரச்சினைத் தீர்வு விடயத்தில் எதிர்பார்க்கின்றனர். ஆனால், இதனை இலங்கையின் எதிர்க்கட்சியான, நிறைவேற்று அதிகாரத்தை கொண்ட ஜனாதிபதியின் பொதுஜன ஐக்கிய முன்னணி தடுக்கும் நிலைப்பாட்டில் இயங்கிக் கொண்டிருக்கிறது. ஐக்கிய தேசியக்கட்சி, அமெரிக்காவுடன் அல்லது இந்தியாவுடன் இணைந்து, தேசிய இனப்பிரச்சினைக்குத் தீர்வைக் கண்டுவிடுமாக இருந்தால், அது பொதுஜன ஐக்கிய முன்னணியின் எதிர்கால அரசியல் நகர்வுக்குப் பாரிய பாதிப்பை ஏற்படுத்திவிடும் என்பதை மையமாகக் கொண்டே, பொதுஜன ஐக்கிய முன்னணி- இந்தியாவின் உதவி தற்போதைய சமாதான நகர்வுக்குக் கிடைத்துவிடக்கூடாது என்பதில் குறியாக இருக்கிறது. இந்தக் குறி, தற்போது வரைக்கும் செயற்திறன் உள்ளதாகவே இருந்து வருகிறது.

பொதுஜன ஐக்கிய முன்னணி, தமது அரசியல் நிலைப்பாட்டில் இந்தியா சார்பாக நடந்து கொள்வதாக வெளியில் தெரிந்தாலும், இந்தியாவைப் பொறுத்தவரையில் முழுமையாக அது பொதுஜன ஐக்கிய முன்னணியை நம்புவதாக இல்லை. ஏனெனில், பொதுஜன ஐக்கிய முன்னணி தற்சமயம் இணைந்து செயற்படும் மக்கள் விடுதலை முன்னணி, 1987 ஆம் ஆண்டுக் காலப்பகுதியில், இந்திய எதிர்ப்புப் போக்கைக் கொண்டதாகச் செயற்பட்டு வந்த அமைப்பு என்பது இந்தியாவுக்குத் தெரியும். இந்தியா கொண்டு வந்த இலங்கைப் பிரச்சினைத் தீர்வுக்கான மாகாணசபை திட்டத்தை, மக்கள் விடுதலை முன்னணி எதிர்த்தது. அதில் பங்கேற்றவர்களைத் தமது ஆயுத பலத்தினால் அடக்க முனைந்தது. இந்தியப் பொருட்கள்கூட, இலங்கை மக்களுக்குக் கிடைக்கக்கூடாது என்ற கொள்கையை அது கடைப்பிடித்து வந்தது. ஆனால், அந்த முன்னணி தற்சமயம் தமது நிலைப்பாட்டையே முழுமையாக மாற்றியுள்ளது. இந்தியா- இலங்கை இனப்பிரச்சினையில் தலையிடவேண்டும் என்ற கொள்கையை அது கொண்டிருந்தாலும், அதனைப் பிரசாரமாக இன்னும் முன்னெடுக்கவில்லை.

இந்த நிலையில் - இந்தியாவின் வெளியுறவுத்துறை அமைச்சர் ஜஸ்வந்த் சின்ஹாவின் இலங்கை விஜயம் ஒத்திவைக்கப்பட்டமையானது, பொதுஜன ஐக்கிய முன்னணியைப் பொறுத்தவரையில், சந்தோஷமான செய்தியாகவே இருக்கிறது. ஆனால், ஐக்கிய தேசியக் கட்சியைப் பொறுத்தவரையில், இந்தச் செய்தி சற்றுத் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது.

உள்நாட்டில் ஏற்பட்டுள்ள அரசியல் பிரச்சினையே ஜஸ்வந்த் சின்ஹாவின் பயண ஒத்திவைப்பிற்கான காரணம் எனக் கூறப்பட்டமை, ஐக்கிய தேசியக்கட்சிக்கு ஆறுதலான விடயமே. மீண்டும் அவரை எப்படியாவது இலங்கைக்கு வரவைத்துவிட வேண்டும் என்ற நோக்கத்துடன், ஐக்கிய தேசியக்கட்சி அரசாங்கம் இருக்கின்றது. எனவே, ஜஸ்வந்த் சின்ஹாவின் பயணத்துக்கான புதிய திகதி குறித்து, இந்திய உயர்ஸ்தானிகர்களுடன் அரசாங்கம் தொடர்புகளை ஏற்படுத்திக் கொண்டிருக்கின்றது. இலங்கையின் இனப்பிரச்சினைத் தீர்வு முனைப்பு - அதில் அரசாங்கத்தினதும், தமிழீழ விடுதலைப் புலிகளினதும் நகர்வுகள் என்பவற்றுக்கு மத்தியில், இலங்கையின் மத்திய அரசியலில், மாற்றங்களுக்கான வாய்ப்புக்கள் தொடர்கின்றன. இலங்கையின் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணப்படவேண்டியதை, ஐக்கிய தேசியக் கட்சியும், பொதுஜன ஐக்கிய முன்னணியும் ஏற்றுக்கொண்டுள்ளன. ஆனால், தமது ஆட்சியின்போது அந்தத் தீர்வு ஏற்படுவதையே இரண்டு கட்சிகளும் விரும்புகின்றன. இது குறிப்பிட்ட இரண்டு கட்சிகளினதும் எதிர்கால அரசியல் நலன்களை மையமாகக் கொண்டதாகும்.

இவ்வாறான ஒரு கட்டமாகவே, நாட்டில் தமது பலத்தைப் பரீட்சிக்கும் ஏற்பாடு ஒன்றில் ஜனாதிபதியும், அவரின் கட்சியினரும் ஈடுபட்டுள்ளனர். இதற்காக அவர்கள் நாட்டில்



ஒரு தேர்தலை நடத்தவேண்டும் என்ற நோக்கத்தில் செயற்பட்டுக் கொண்டிருக்கின்றனர். எதிர்வரும் டிசம்பர் மாதத்துக்குள் நாட்டில் ஒரு தேர்தலை நடத்திவிட வேண்டும் என, ஜனாதிபதி எண்ணம் கொண்டிருக்கிறார். அதற்கான முன்னெடுப்புக்களில் அவர் தற்சமயம் ஈடுபட்டுள்ளார். பெரும்பாலும் டிசம்பர் மாதத்துக்கான மாகாணசபைத் தேர்தல் ஒன்றை நடத்துவதற்கே ஜனாதிபதி முனைப்பு எடுத்து வருகிறார். நாட்டின் வடக்கு - கிழக்கு மாகாணசபையைத் தவிர்ந்த, ஏனைய மாகாண சபைகள் 2004 ஆம் ஆண்டில் வெவ்வேறு மாதப்பகுதியில் தமது 5 வருட ஆயுட்காலத்தை நிறைவு செய்கின்றன. இந்த நிலையில், இந்த அனைத்து மாகாணசபைகளின் தேர்தல்களையும் ஒருங்கே நடத்திவிட, ஜனாதிபதி நடவடிக்கைகளை எடுத்து வருகிறார். மாகாணசபை ஆட்சிகளை ஒருங்கே கலைத்துவிட்டு, அவற்றுக்கான தேர்தல்களை இந்த வருட டிசம்பர் மாதத்திற்குள் நடத்துவதன் மூலம், மக்களின் ஒட்டுமொத்த கருத்துக்களை அறிந்துகொள்ளமுடியும் என நம்பும் ஜனாதிபதி, அதனைத் தளமாகக்கொண்டு, பொதுத்தேர்தல் ஒன்றுக்குச் செல்வதையே அவர் விரும்புகிறார்.

எனினும், பொதுஜன ஐக்கிய முன்னணியுடன் கூட்டு ஒன்றை ஏற்படுத்திக்கொள்ள முயலும் மக்கள் விடுதலை முன்னணி, டிசம்பர் மாதத்துக்குள் பொதுத்தேர்தல் ஒன்றை நடத்துவதையே விரும்புகிறது. தற்போதைய நிலையில், நாட்டின் தேசிய இனப்பிரச்சினைக்குத் தீர்வு ஒன்று ஏற்பட்டு, அதன்மூலம் அபிவிருத்திகள் முன்னெடுக்கப்படுமானால், அது ஆளும் ஐக்கிய தேசியக்கட்சிக்கு- மக்கள் மத்தியில் வெற்றி வாய்ப்பை எற்படுத்திக் கொடுத்துவிடும்.

இதனைப் பொதுஜன ஐக்கிய முன்னணியோ அல்லது மக்கள் விடுதலை முன்னணியோ விரும்பவில்லை. தற்சமயம், தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு - இடைக்கால நிர்வாகம் கொடுக்கப்படப்போகிறது. மற்றும் நாட்டுப் பிரச்சினை போன்ற இந்தக் கட்சிகளின் பிரசாரங்கள் ஓரளவு தென்னிலங்கை மக்கள் மத்தியில், சாதகமான போக்கை ஏற்படுத்தியுள்ளன. திருகோணமலை மற்றும் அம்பாறை போன்ற பகுதிகளில் - மக்கள் விடுதலை முன்னணியின் பிரசாரங்கள் தீவிரம் பெற்றிருப்பதும் இதற்கான காரணமாகும். பொதுஜன ஐக்கிய முன்னணியைப் பொறுத்தவரையில் அந்த முன்னணியின் செலவாக்கு கிராமப் பகுதிகளில் அதிகரித்துள்ளது. கருத்துக் கணிப்புகள் காட்டுகின்ற நாட்டின் இனப்பிரச்சினைத் தீர்வு என்பதைக் காட்டிலும், வேலைவாய்ப்புக்கள் மற்றும் அபிவிருத்திகள் என்பவற்றால், ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கத்திடம் இருந்து எதிர்பார்த்த கிராமப்புற மக்கள் - இச்செயல் இதுவரை மேற்கொள்ளப்படாமையால், தமது ஆதரவு அலையைப் பொதுஜன ஐக்கிய முன்னணியின் பக்கம் திருப்பியுள்ளனர்.

இவ்வாறான சூழ்நிலையைப் பயன்படுத்தியே ஜனாதிபதி தேர்தல் ஒன்றுக்குத் தயாராகி வருகிறார். ஐக்கிய தேசியக் கட்சியைப் பொறுத்தமட்டில், மீண்டும் ஒரு தேர்தல் வந்தால், அதில் வெற்றி பெறும் நம்பிக்கையைக் கொண்டுள்ளது. அதற்காகத் தம்மிடம் இருக்கும் வளங்களைப் பயன்படுத்தி, இறுதிநேரப் பிரசாரத்திற்காகப் பயன்படுத்துவதற்கு, அந்தக் கட்சி எண்ணம் கொண்டுள்ளது. இறுதிநேரப் பிரசாரமாக வேலைவாய்ப்புக்களை அந்தக் கட்சி நோக்கமாகக் கொண்டுள்ளது. இதற்காக எப்போதும் தமது கட்சிக்கு ஆதரவை வழங்கும் வர்த்தக சமூகத்தை நம்பியிருக்கும், ஐக்கிய தேசியக் கட்சி தனியார்துறையினரிடம் வேலைவாய்ப்புக்களை ஏற்கனவே வேண்டுகோளாக முன்வைத்திருக்கின்றது. இதற்கு மத்தியில், அந்தக் கட்சியில் மூன்றாவது அமைச்சர் ஒருவர் தாம் பதவிவிலகப் போவதாக எச்சரித்துள்ளார்.

நீர்முகாமைத்துவத் துறைக்கான அமைச்சரவை அந்தஸ்து அற்ற அமைச்சரான லக்ஷ்மன் செனவிரட்னவே அவராவார். தமக்கு அமைச்சரவை அந்தஸ்து வழங்கப்படாவிட்டால், எதிர்வரும் வெள்ளிக்கிழமை அளவில் பதவி விலகப்போவதாக கூறியுள்ளார். இதற்கு முன்னதாக உள்ளூராட்சி மாகாண சபைகள் அமைச்சர் அலுக் அலுவிகாரவும், கிராமசேவகர்களுக்கு மோட்டார் சைக்கிள்கள் வழங்கப்படாவிட்டால், தாம் பதவி விலகப் போவதாக எச்சரித்துள்ளார். இந்தப் பதவி விலகல் அச்சுறுத்தல்கள் - ஐக்கிய தேசியக் கட்சிக்கு - இனப்பிரச்சினை, பொதுஜன ஐக்கிய முன்னணி என்ற இரண்டு பிரச்சினைகளுக்கு அப்பால், மூன்றாவது பிரச்சினையாக இருக்கிறது. ★

---

## மக்கள் குடியிருப்பதால்

# பரந்தன் நெற்களஞ்சியம் புனரமைக்க முடியாதநிலை

(ஆழியவளை)

பரந்தன் நெற்களஞ்சியத்தில் மக்கள் குடியமர்ந்துள்ளதன் காரணமாக, நெற்களஞ்சியப் புனரமைப்புக்களை மேற்கொள்ளமுடியாத நிலை ஏற்பட்டுள்ளதென, நெற்களஞ்சியப் பொறுப்பாளர்கள் கிளிநொச்சி அரசாங்க அதிபரின் கவனத்திற்குக் கொண்டுவந்துள்ளனர்.

இதனைக் கருத்தில் எடுத்த அரச அதிபர் - இன்றைய காலகட்டத்தில் விவசாயிகளின் நெல்லைக் களஞ்சியப்படுத்துவதற்குப் போதிய களஞ்சியங்கள் இல்லாமையின் காரணமாகவே, நெல்லினைக் கொள்வனவு செய்வதற்குச் சம்பந்தப்பட்ட திணைக்களங்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றன.

இந்நிலையில், மேற்படி களஞ்சியத்தினைப் புனரமைத்துச் சிறப்பாக நெற்செய்கையில் ஈடுபட்டுள்ள விவசாயிகளின் நெல்லைக் கொள்வனவு செய்து, களஞ்சியத்தில் இடுவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவேண்டும்.

எனவே, கரைச்சிப் பிரதேச களஞ்சியத்தில் குடியிருப்போரை அப்புறப்படுத்த உடன் நடவடிக்கையினை மேற்கொள்ளுமாறு, அரச அதிபர் பணிப்புரை விடுத்தார். (122)

# மரநடுகையினை மேற்கொள்வதற்கு திணைக்களங்கள் முன்வரவேண்டும்

## கிளிநொச்சி அரச அதிபர் கோரிக்கை

சூழல் பாதுகாப்பிற்கான மரநடுகையினை அமுல்படுத்துவதற்கு, சகல திணைக்களங்களும் முன்வரவேண்டும்.

இவ்வாறு கடந்த செவ்வாய்க்கிழமை - மாவட்ட அரச செயலகத்தில் நடைபெற்ற அத்தியாவசிய சேவைகள் குழுக்கூட்டத்தில் கலந்துகொண்ட அரச, அரசசார்பற்ற பிரதிநிதிகளிடம் - கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் தி. இராசநாயகம் வேண்டுகோள் விடுத்தார்.

போர் அனர்த்தங்களின் விளைவாக, எமது மண்ணில் இருந்த பாரிய மரங்கள் அழிந்து போயுள்ளன. எனவே, மீண்டும் சூழல் பாதுகாப்பினைக் கருத்திற்கொண்டு, மரநடுகையினை மேற்கொள்ளவேண்டியது இங்குள்ள சகலரினதும் தலையாய கடமையாகும்.

எனவே, முன்னேற்பாடாக ஒவ்வொரு திணைக்களமும் தான் முன்வந்து - அரசசார்பற்ற நிறுவனங்கள் குறைந்தது 10 மரங்களையாவது நாட்ட முன்வரவேண்டும் என, அவர் மேலும் கேட்டுக்கொண்டார். (122)

## உகண்டாவின் முன்னாள் சர்வாதிகாரி
# இடி அமீன் சவூதி அரேபியாவில் நேற்று உயிரிழந்ததாக அறிவிப்பு!




(ரியாத்)

உகண்டாவின் முன்னாள் சர்வாதிகாரியான இடி அமீன், சவூதிஅரேபியாவின் ஜெடா நகரிலுள்ள அரச விசேட மருத்துவமனையில் நேற்று உயிரிழந்ததாக, அந்த நாடு அறிவித்துள்ளது.

கடந்த ஜூலை 18 ஆம் திகதி முதல் 'கோமா' நிலையில் இருந்த இடி அமீன், சிறுநீரகக் கோளாறினாலும் பாதிக்கப்பட்டிருந்தார்.

1966 ஆம் ஆண்டு உகண்டாவின் ஜனாதிபதியாகவிருந்த மில்ரன் ஒபேர்ட், தனது அரசின் படைத் தளபதியாக இடி அமீனை நியமித்திருந்தார்.

1971 ஆம் ஆண்டு, இராணுவப் புரட்சி மூலம் ஒபேர்ட்டின் அரசாங்கத்தை பதவிகவிழ்த்து - ஆட்சியைக் கைப்பற்றிய இடிஅமீன், 1979 ஆம் ஆண்டு வரை சுமார் 8 ஆண்டுகள் உகண்டாவில் சர்வாதிகார ஆட்சி நடத்தினார்.

இடி அமீன் உகண்டாவை ஆட்சி செய்த காலப்பகுதி, ஆபிரிக்க வரலாற்றின் இரத்தம் தோய்ந்த காலப்பகுதியாக வர்ணிக்கப்படுகிறது.

தனது எதிரிகள் எனக் கருதப்பட்டவர்களை கொலை செய்து முதலைகளுக்கு இரையாக்குதல் முதல் ஈவிரக்கமற்ற நடவடிக்கைகளை இவர் மேற்கொண்டவர்.

இவரது ஆட்சிக்காலத்தில், சுமார் 4 இலட்சம் மக்கள் உயிரிழந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

உகண்டாவில் வாழ்ந்த ஆசிய நாட்டவர்கள், அந்த நாட்டின் பொருளாதாரத்தைச் சுரண்டுவதாகக் கூறி, அவர்களை, 1972 ஆம் ஆண்டு, இடி அமீன் நாட்டைவிட்டு வெளியேற்றினார். இவரால் நாடு கடத்தப்பட்ட உகண்டா பிரஜைகளும் தன்சானிய நாட்டுப் படையினரும் இணைந்து, 1979 ஆம் ஆண்டு, உகண்டாவின் தலை நகரான காம்பாலாவைக் கைப்பற்றி, இடி அமீனின் ஆட்சியை அகற்றியிருந்தனர்



சொலமன் தீவுகளில் போராட்டம் நடத்திவரும் மலேப்ரன் ஈகல் போஷ் என்ற அமைப்பின் தலைவர் ஜீம்பி ராஷ்டாவும், உறுப்பினர்களும் ஆயுதங்களைக் கையளிப்பதற்காகக் காத்துநிற்கின்றனர்.

### பலஸ்தீனர்களிடம்
## மேற்குக்கரையின் பாதுகாப்பை ஒப்படைக்க இஸ்ரேல் தயார்!

இஸ்ரேலின் ஆதிக்கத்திலிலுள்ள பலஸ்தீன வடபகுதி நகரான மேற்குக் கரையின் நான்கு பகுதிகளின் பாதுகாப்புப் பொறுப்புக்களை, இம் மாத இறுதியிலிருந்து பலஸ்தீனர்களிடம் கையளிப்பதற்கு இஸ்ரேல் முன்வந்துள்ளது.

அமெரிக்காவின் சமாதான நடவடிக்கைளைக் கௌரவப்படுத்துவதற்காகவே, இந்த முடிவை எடுத்துள்ளதாகவும் இஸ்ரேல் தெரிவித்துள்ளது.

இனியும் பலஸ்தீனப் போராளிகள் இஸ்ரேல் மீது தாக்குதலை மேற்கொண்டால், அது அமெரிக்காவின் சமாதான முயற்சிகளை முன்னெடுத்துச் செல்லமுடியாமல் செய்துவிடும் எனவும் இஸ்ரேல் எச்சரித்துள்ளது.

இதேவேளை - அமெரிக்காவின் சமாதான முயற்சிகள் ஆரம்பிக்கப்பட்டு, 6 வாரங்கள் முடிவடைந்துள்ளன. இந்தக் காலப்பகுதியில் பலஸ்தீனர்கள் இருவர் மேற்கொண்ட தற்கொலைத் தாக்குதலால், இஸ்ரேலியப் படையினர் பலஸ்தீனப் போராளிகளைக் கொல்லவும், கைதுசெய்யவும் வழிவகுத்தது குறிப்பிடத்தக்கது.

உலகவலம்

## 'லொக்கபீ' தாக்குதல்; லிபியா பொறுப்பேற்பு!

1988 ஆம் ஆண்டு லொக்கபீயில் இடம்பெற்ற விமானக் குண்டு வெடிப்புக்கு, தான் பொறுப்பேற்பதாகவும், இவ்வாறான தீவிரவாத நடவடிக்கைகளில் இனி ஈடுபடமாட்டோம் எனவும், ஐக்கிய நாடுகள் பாதுகாப்பு சபைக்கு லிபியா கடிதம் மூலம் தெரிவித்துள்ளது.

இக்குண்டு வெடிப்புக்கு லிபியா பொறுப்பேற்றுள்ளதைத் தொடர்ந்து, அந்நாட்டின் மீதான பொருளாதாரத் தடைகளை நீக்கிவிடுமாறு, அமெரிக்காவும் பிரிட்டனும் ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபையை கடிதம் மூலம் கோரியுள்ளன.

ஆனாலும் - லிபியாவில், மனித உரிமைகள் முறையாகப் பேணப்படவில்லையென்றும், பேரழிவைத் தரும் ஆயுதங்களை அது வைத்திருப்பதாகவும் அமெரிக்கா சந்தேகம் தெரிவித்துள்ளது

இதேவேளை, விமானக்குண்டு வெடிப்புக்கான நஷ்டஈட்டு விவகாரத்தில், பிரான்ஸ் தலையிட்டதை லிபியா கண்டித்துள்ளது.

1999 ஆம் ஆண்டு முதல் லிபியாவுக்கு எதிரான பொருளாதாரத் தடையை ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபை விதித்திருப்பது குறிப்பிடத்தக்கது.



பஸ்ராவில், பிரிட்டிஷ் அம்புலன்ஸ் வண்டி மீது நடத்தப்பட்ட குண்டுத் தாக்குதலில், சம்பந்தப்பட்டிருப்பதாகக் கருதப்படும் ஒருவரை பிரிட்டிஷ் படையினர் கைதுசெய்வதைப் படத்தில் காணலாம்.

## நேபாளத்தில் மண்சரிவு; 15 படையினர் மரணம்!

நேபாளத்தின் தலைநகரான காத்மண்டுவிலிருந்து 95, கிலோமீற்றர் தொலைவிலுள்ள ரஸுவா என்ற இடத்தில் அமைந்துள்ள நேபாளப் படையினரின் காவலரண் ஒன்று மண்சரிவு காரணமாக முற்றாக அழிந்துபோனதில், 15 படையினர் உயிரிழந்தனர்.

கடந்த வெள்ளிக்கிழமை நள்ளிரவு காவலரணிலிருந்த படையினர் நித்திரையில் இருக்கும்போதே இந்த மண்சரிவு ஏற்பட்டுள்ளது.

இந்த அனர்த்தத்தில், காவலரணும், அருகில் இருந்த குடியிருப்புக்கள் சிலவும் ட்ருசீலி என்ற ஆற்றுடன் அள்ளிச் செல்லப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இவர்களை மீட்கும் பணியில் படையினரின் ஹெலிகொப்ரர்கள் ஈடுபட்டுள்ளன.

இந்த அனர்த்தத்தில் காயமடைந்த மூன்று படைவீரர்கள், சிகிச்சைக்காக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

மண்சரிவு இடம்பெற்ற பகுதியின் தலைவரான மோகன் பகதூர், நேபாள செய்தி ஸ்தாபனம் ஒன்றுக்கு இத்தகவலை வெளியிட்டுள்ளார்.

நேபாளத்தில், கடந்த ஜூன் மாத்திலிருந்து பெய்துவரும் கடும்மழை காரணமாக ஏற்பட்ட மண்சரிவுகளில் இதுவரை 200 பேர்வரை உயிரிழந்துள்ளனர்.



அமெரிக்க சமாதானப் படையினரும் - மேற்கு அபிரிக்க சமாதானப் படையினரும் லைபீரியாவில் அளவளாவும் காட்சி.

### இந்தோனேஷிய குண்டுத் தாக்குதலின் சூத்திரதாரிகள் சிலர் கைது

இந்தோனேஷியத் தலைநகர் ஜகார்த்தாவில் அமைந்திருந்த உல்லாச விடுதியொன்றில் இடம்பெற்ற குண்டுவெடிப்புக்கு காரணமாகவிருந்த பலர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

கைதுசெய்யப்பட்டவர்களின் எண்ணிக்கையை வெளியிடுவதற்கு, இந்தோனேஷிய பொலிஸ் அதிகாரியான ஜெனரல் டை பக்தியர் மறுத்துவிட்டார்.

இக்குண்டுவெடிப்பில், 12 பேர் உயிரிழந்திருந்ததும், 150 பேர்வரை காயமடைந்திருந்ததும் குறிப்பிடத்தக்கது.

இதேவேளை - இவ்வாறான தாக்குதல்கள் தொடராலமென அவுஸ்திரேலிய அரசு இந்தோனேஷியாவை எச்சரித்துள்ளது.

## பிறக்கும் குழந்தைகளுக்கு மரபணுப் பரிசோதனை மேற்கொள்ளவேண்டாமென பிரிட்டனில் கோரிக்கை

பிரிட்டனில் - பிறக்கும் குழந்தைகளுக்கு, மேற்கொள்ளப்படும் மரபணுப் பரிசோதனைகளை நிறுத்தும்படி, 'சயன்ஸ் வாஜ் ரோக்' என்ற அமைப்பு கேட்டுள்ளது.

இந்த மரபணுச் சோதனைகளால் அதிகளவான பணம் விரயமாவதாகவும், தனி மனிதனுடைய சுதந்திரம் பாதிக்கப்படுவதாகவும், மரபணுப் பரிசோதனை அறிக்கைகள் பாதுகாப்பாக வைக்கப்படும் என்பதற்கான உத்தரவாதம் இல்லையென்றும் இந்த அமைப்பு கூறியுள்ளது.

இதுகுறித்து கருத்து வெளியிட்டுள்ள சட்டத்தரணியான ஹெலனா ஹெனடி, இந்த மரபணுப் பரிசோதனை அறிக்கைகள், அங்கு பணிபுரியும் ஊழியர்களாலேயே கைமாற்றப்படலாம் எனவும், ஒருவருக்குள்ள பரம்பரை நோய்கள் மற்றும் மன வியாதிகள் தொடர்பான தகவல்களை பிறர் அறியும்போது, குறிப்பிட்ட நபர் மனஉளைச்சலுக்குள்ளாகலாம் எனவும் தெரிவித்தார்.



## பத்தாயிரம் தொன் மசகு எண்ணெய் கடலில்!

(கராச்சி)

பாகிஸ்தானின் தென்பகுதியில் அமைந்த துறைமுகமொன்றில், 3 வாரங்களுக்கு முன் கிறீஸ் நாட்டுக்குச் சொந்தமான 'ரஸ்மன் ஸ்பிரிட்' என்ற எண்ணெய்க் கப்பல் சேதமடைந்திருந்தது.

இக்கப்பலில் இருந்து 10,000 தொன் மசகு எண்ணெய் இதுவரை கடலில் பரவியுள்ளது. இதனால், கப்பல்கள் துறைமுகத்தினுள் வருவது தடைப்பட்டுள்ளது.

2000 தொன் வரையான மசகு எண்ணெய், கப்பலிலிருந்து மீட்கப்பட்டது.

கடலை மாசடையச் செய்த குற்றத்திற்காக, குறிப்பிட்ட கப்பல் கம்பனியிடமிருந்து 2 லட்சம் டொலர் வரை நஷ்டஈடு கோரப்போவதாக, கராச்சி துறைமுக அதிகாரியான 'அகமட் கெயட்' தெரிவித்தார்.

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# காணியமைச்சர் ராஜித சேனாரத்ன நேற்று யாழ்ப்பாணத்திற்கு விஜயம்!

(யாழ்ப்பாணம்)

காணி அமைச்சர் ராஜித சேனரத்தன, திடீர் விஜயம் ஒன்றை மேற்கொண்டு - நேற்று யாழ்ப்பாணம் வந்திருந்தார். இவர், குருநகர் மற்றும் துரையப்பா விளையாட்டரங்கு ஆகிய இடங்களைப் பார்வையிட்டார்.

முன்னதாக, நேற்றுக்காலை 8.00 மணியளவில் பலாலி விமான நிலையத்தை வந்தடைந்த அமைச்சர், பலாலியில், இராணுவ அதிகாரிகளுடன் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டிருந்தார்.

யாழ். குடாநாட்டிலுள்ள பாதுகாப்பு வலயங்களில், மக்களை மீளக் குடியமர்த்துவதிலுள்ள பிரச்சினைகள் தொடர்பாக பேசப்பட்டதாகத் தெரியவருகிறது.

பின்னர்-

பிற்பகல் 2 மணியளவில் குருநகருக்குச் சென்ற அமைச்சர்- இறங்குதுறை, சீநோர் நிறுவனம் ஆகியவற்றைப் பார்வையிட்டதுடன், குருநகர்ப் பகுதியில் கிராமங்களுக்குச் சென்று, அங்குள்ள குடியிருப்புகளைப் பார்வையிட்டார்,

யாழ்.பொலிஸ் நிலையத்துக்குச் சென்று, பொலிஸ் நிலையத்தின் கட்டத்தையும் அவர் பார்வையிட்டார்.

தொடர்ந்து, தேசிய விளையாட்டு விழாவை நடத்துவதற்காக - புனரமைக்கப்பட்டு வரும் துரையப்பா விளையாட்டரங்கையும் அமைச்சர் ராஜித சேனாரத்தன பார்வையிட்டார்.

பிரசன்னா
கணனிக் கல்வி நிலையம்
K.K.S. வீதி, சுன்னாகம்
எமது நிலையத்தில் குறைந்த கட்டணத்தில்
பின்வரும் சேவைகளைப் பெற்றுக்கொள்ளலாம்
பல்கலைக்கழக ஆய்வுக்கட்டுரைகள் · றோணியோ வேலைகள்
Printing (Lazer, Dotmatic and Colour) · Scanning
CD Writing (Mp3, Audio, Video)
News Paper Advertisment Designing
Computer Sales & Repairing
Prashannaa CSC Graphics

## மூதூரில் பொதுமக்கள்...

..றித் தாக்குதல் நடத்தப்பட்டது.

இதனையடுத்து, படையினர் அவர்களை நோக்கிச் சுட்டதில் ஆறு பொதுமக்கள் காயமடைந்தனர். இவர்கள் அனைவரும் மூதூர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

இதேவேளை, தற்போதும் மூதூர்ப் பகுதியில் இரவு நேர ஊரடங்குச் சட்டம் அமுலிலுள்ளது. அத்துடன், தொடர்ந்து அப்பகுதி பதற்றம் நிறைந்ததாகவே காணப்படுகின்றது. சனநடமாட்டம் குறைவாக உள்ளதுடன், வர்த்தக நிலையங்கள் முழுமையாகத் திறக்கப்படவில்லை என்பதுடன், வாகன நடமாட்டங்களும் குறைந்தே காணப்படுவதாக அங்கிருந்துவரும் செய்திகள் தெரிவிக்கின்றன. (10)

## மாணவி மீது அங்கசேஷ்டை...

முற்பட்டுள்ளார். இதனையடுத்து மாணவி கூச்சலிட, அருகில் நின்ற பொதுமக்கள் இளைஞரை மடக்கிப் பிடித்து, மாணவி உட்பட பொதுமக்களும் பிரஸ்தாப இளைஞரை கடுமையாகத் தாக்கினர். பின்னர், கலாசாரத்தைப் பேணும் இளைஞர் குழுவிடம் அவரை ஒப்படைத்துள்ளனர்.

இதேவேளை - நல்லூர் ஆலய சூழலை அண்டிய பகுதிகளில், சில இளைஞர் குழுக்கள் ஆலயத்திற்கு வரும் இளம்பெண்களுடன் சேஷ்டை புரிய முற்பட்டுள்ளதாக, நல்லூரில் இயங்கும் சிறப்புச் செயலணியிடம் பொதுமக்களால் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இதையடுத்து செயலணிக் குழுவினர், இது தொடர்பாக தீவிர விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (57)

## கூட்டுறவுதின விழா...

திற்கு வருகைதந்த கண்காணிப்புக் குழுவினர், கூட்டுறவுச் சபை செயலாளரிடம் விசாரணைகளை மேற்கொண்டனர். எனினும் விழா முடிவடையும்வரை புலிக்கொடி இறக்கப்படவில்லை இந்த விசாரணை தொடர்பாக, மக்கள் பெரும் விசனமடைந்துள்ளனர்.

இதேவேளை -

போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழு விதித்த தடையையும் மீறி - வியாசனின் 'உலைக்களம்' கவிதைத் தொகுப்பு அறிமுகவிழா நேற்று வவுனியாவில் நடைபெற்றது.

இந்த நிகழ்வு - வவுனியா சுந்தாணந்தா இந்து இளைஞர் மண்டபத்தில் ஆரம்பமாக இருந்தவேளை, அந்த இடத்துக்கு வந்த வவுனியா மாவட்ட போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினர் - புலிக்கொடி ஏற்றப்படுவதை இராணுவம் அனுமதிக்காது என்றும், எனவே தேசியக் கொடியேற்றுவதை நிறுத்துமாறும் கோரி இருந்தனர்.

இதனை மறுத்த வவுனியா மாவட்ட அரசியற்துறையினர் - எமது நிகழ்வுகளில் எமது தேசியக்கொடி ஏற்றுவது வழமை எனவும், எனவே இதை நிறுத்தமாட்டோம் எனத் தெரிவித்ததுடன், தமிழீழ தேசியக்கொடி யேற்றப்பட்டு நிகழ்வுகள் தொடர்ந்து நடைபெற்றன. (57)

## சனசமூக நிலையங்களுக்கான கலந்துரையாடல்!

(யாழ்ப்பாணம்)

சனசமூக நிலையங்களை மேம்படுத்துவதற்கான கலந்துரையாடல் ஒன்று, இன்று காலை 9.30 மணிக்கு கே.கே.எஸ் வீதி நாச்சிமார் கோவிலடியில் அமைந்துள்ள மில்க்வைற் தொழிலகத்தின் செயலகத்தில் நடைபெறவுள்ளது.

## விடுதலைப் புலிகள் தரப்பின்...

களாக இருக்கிறோம். பேச்சுவார்த்தை மூலம் சமாதானம் முன்னெடுக்கப்படுவதால், மக்கள் நன்மையடைந்திருக்கிறார்கள். இதனால், மக்கள் கேட்கும் கேள்விகளுக்கு நாங்கள் பதில் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறோம்.

ஏற்கனவே வடக்கு - கிழக்கு இடைக்கால நிர்வாகத் திட்டம் தொடர்பாக, அரசாங்கம் இரண்டு வரைபுகளை தந்திருக்கிறது. அது எந்தவிதத்திலும் நடைமுறைச் சாத்தியமற்ற அதிகாரமில்லாத ஒரு வரைபாக இருந்தது.

மூன்றாம் தடவையாகத் தந்ததில் பல குறைபாடுகள் இருந்தன. அது நடைமுறைச்சாத்தியமானதல்ல என்று, நாங்கள் விளங்கிக் கொண்டாலும்- அதை நாம் நிராகரிக்கவில்லை. நாங்கள் இந்த வரைபில் சில திருத்தங்களையும், ஆலோசனைகளையும் முன்வைத்து- அரசாங்கத்துக்கு ஒரு சந்தர்ப்பத்தை வழங்க இருக்கிறோம்.

இந்தத் திருத்தத்தை - எங்களுடைய சட்ட நிபுணர்கள் மற்றும் துறைசார் நிபுணர்களுடன் கலந்தாலோசித்து, அதற்கான தீர்வை முன் வைப்போம். எங்களுடைய தலைமைப்பீடத்தின் பரிசீலனைக்குப் பின்பு, நோர்வேத் தரப்பினூடாக திருத்த யோசனைகளை அரசிற்கு அனுப்பவிருக்கிறோம்.

எங்களுடைய துறைசார் வல்லுநர்கள், சட்டநிபுணர்கள் ஆகியோர் அநேகமாகப் புலம்பெயர்ந்த நாடுகளில் வாழ்கின்றனர். வெளிநாட்டவாகளையும், சர்வதேச நிபுணத்துவம் வாய்ந்தவர்களையும் - தேவையேற்படின் அவர்களின் ஆலோசனைகளை நாங்கள் பெற்றுக்கொள்வது இலகுவாக இருக்குமென நினைக்கிறோம். இதனாலேயே இந்தச் சந்திப்பு வெளிநாட்டில் நடத்தப்படுகிறது

எமது அரசியல் ஆலோசகரான அன்ரன் பாலசிங்கத்தின் உடல் நிலை எல்லோரும் அறிந்தது. அவர் தற்பொழுது நீண்டதூரப் பயணம் செய்யமுடியாத நெருக்கடியான நிலையிலிருக்கிறார். அவருக்கு நீண்ட களைப்பை ஏற்படுத்தாது, அவரிடமிருந்து ஆலோசனைகளைப் பெற்று, ஒழுங்குபடுத்த இருக்கிறோம். எங்களது தலைமைப்பீடத்தின் அறிவுறுத்தலின் பிரகாரம், எங்கள் தலைவரின் ஆலோசனையைப் பெற்று, அவரோடு கலந்தாலோசித்த பின்னர்தான் - இந்த வரைபு பற்றி தீர்மானிப்போம்.

திருகோணமலை - குரங்குப் பாஞ்சான் முகாம் விடயத்தில், எந்த விதத்திலும் யுத்தநிறுத்த உடன்படிக்கை மீறல் இடம்பெறவில்லை. நீண்டகாலமாக, பல வருடங்களாக இருந்த முகாமை, தற்போது இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி, இராணுவம் அதற்குள் ஏதோவொரு வகையில் நுழைந்து பார்த்திருக்கிறார்கள்.

போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழு தங்களுக்கு கிடைத்த ஒரு தலைப்பட்சமான தகவல்களை வைத்துக்கொண்டு, எடுத்ததீர்மானம் தவறு என்று - போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவிற்கு தெளிவாக்கியிருக்கிறோம். வலியுறுத்திக் கூறியிருக்கிறோம். நோர்வேயின் விசேட தூதுவர் இங்கு வருகைதந்தபோது, எங்களுடைய அதிருப்தியை தெளிவாக வெளிப்படுத்தியிருக்கிறோம்.

எனவே, யுத்தநிறுத்த உடன்படிக்கை மீறல் என்றவகையில், இந்த யுத்தநிறுத்த உடன்படிக்கையில் ஏற்றுக்கொள்ளப்பட்ட பல விடயங்கள் நிறைவேற்றப்படாதது பாரிய யுத்தநிறுத்த மீறலாகும்.

கடந்த இரண்டு, மூன்று நாட்களாக தமிழ்க்கட்சிகளோடு, கூடி ஆராய்ந்து வந்திருக்கிறோம். தமிழ்க் கட்சிகளுடன் கலந்துரையாடி, அவர்களின் கருத்துக்களையும் அறிந்திருக்கிறோம்.

அநேகமாக அவர்களுடைய எதிர்பார்ப்பு - தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைமைத்துவத்தின் கீழே இடைக்கால நிர்வாகம் ஏற்படுத்தப்படவேண்டுமென்பதும், இடைக்கால நிர்வாகமாக இருப்பதால் தமிழீழ விடுதலைப் புலிகளே ஒழுங்குபடுத்துவதுடன் தங்களுக்கு விருப்பமாகும், என்று தெரிவித்திருக்கிறார்கள்.

ஜனநாயக வழியில் மக்களால் அங்கீகரிக்கப்பட்ட கட்சி என்றால், அதை நாங்கள் கண்டிப்பாக கவனத்தில் கொள்ளவேண்டும். ஆனால், ஈ.பி.டி.பி, வரதர் அணி போன்ற அமைப்புக்கள்- மக்களால் நிராகரிக்கப்பட்டவர்கள். இறுதியாக நடந்த தேர்தலில் ஈ.பி.டி.பி போன்ற கட்சிகளுக்கு தலைமைத்துவம் கிடைத்ததற்கு - அங்கே நடந்த மோசடிகள் உங்களுக்குத் தெரியும். மக்கள் ஏற்றுக்கொள்ளாத, மக்களால் நிராகரிக்கப்பட்ட இக்குழுக்களை, தேசவிரோதக் குழுக்களை இதனுள் இணைக்க வேண்டுமென்று, நீங்கள் நினைப்பது எங்களுக்குப் புரியாததொன்று என்று அவர் மேலும் தெரிவித்தார்.

## புனர்நிர்மாண...

கருத்துக்களை முன்வைத்தனர்.

கண்ணிவெடி அகற்றுதல், கிராமிய அபிவிருத்தி, செயற்கை உறுப்பு தயாரித்தல், மக்களுக்கு வருமானம் தரக்கூடிய வேலைவாய்ப்புப் பற்றிய நான்கு விடயங்களில், தமது உதவிகள் அமையும் என்றும்,

அடுத்த மாதம் தமது உதவித் திட்டங்கள் ஆரம்பிக்கப்படும் என்றும் அவர் கூறியுள்ளார்.


மேலும், தமது பிரதமர் இப்போதைய சமாதான நடவடிக்கைகளுக்கு- தமது நாடு பூரண ஒத்துழைப்பு வழங்கும் எனக் கூறியதையும், அவர் குறிப்பிட்டுள்ளார்.

அரசியற்துறைப் பொறுப்பாளரின் சந்திப்புக்குப் பின்னர், தாய்லாந்துக் குழுவினர் தமிழர் புனர்வாழ்வு கழகத்துக்குச் சென்று- அதன் பணிகள் குறித்தும் கலந்துரையாடினர்.

## இனந்தெரியாதோரால் இருவர் கடத்தப்பட்டனர்!

மூதூரில் வைத்து, நேற்றுக் காலை இருவர் கடத்திச்செல்லப்பட்டனர். பொலிஸ் நிலையத்துக்கு அருகிலுள்ள இறால்குழி கடற்பகுதியில், படகில் பயணம் செய்துகொண்டிருந்தபோதே, இவர்கள் இருவரும் கடத்தப்பட்டுள்ளனர். தந்தையும், மகனும் கடத்தப்பட்ட இந்தச் சம்பவத்தின் ஈடுபட்டவர்கள் யார் என்பது குறித்து, இதுவரை தெளிவான தகவல்கள் கிடைகககவில்லை எனப் பொலிஸார் கூறுகின்றனர்.

நாளை ஆரம்பம்
A/L 2004
DAY CLASS
(வர்த்தகப் பிரிவு)
காலை 8.30 (பு.நே.)
DMI
யாழ்.நகர்
(சி-1355)




## மூளை வளர்ச்சி குன்றிய பிள்ளைகளுக்கு உதவ அயர்லாந்து நிபுணர்கள் வருகை

அயர்லாந்து நாட்டிலிருந்து சிறப்புத் தேர்ச்சி பெற்ற 9 பேர் அடங்கிய நிபுணர்குழு, யாழ்ப்பாணத்தில் பரியோவான் கல்லூரியில், இம்மாதம் 18 ஆம் திகதி தொடக்கம் 22 ஆம் திகதி வரை மூளை வளர்ச்சி குன்றிய பிள்ளைகளைப் பரிசோதித்து மதிப்பீடு செய்து அவற்றிற்குரிய பயிற்சி நெறிகள் அடங்கிய ஆலோசனைகளை வழங்க உள்ளது.

இவ் ஆலோசனைகளை பெறவிரும்புவோர், கீழ்காணும் தொலை பேசி இலக்கத்திற்கு தொடர்புகொண்டு முன்கூட்டியே பதிவுசெய்யுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

குறிப்பிட்ட அளவு பிள்ளைகள் மட்டுமே நிபுணர்களால் மதிப்பீடு செய்ய முடியுமானதால், முன்கூட்டியே உங்களைப் பதிவு செய்து உங்களுக் கென குறிப்பிட்ட திகதியையும், நேரத்தையும் பெற்றுக்கொள்ளுங்கள்.

Millennium Institute For
Children With Special Needs,
C/O Promoters Engineening Company Limited,
*844, Point Pedro Road, Nallur, Jaffna*
தொலைபேசி.இல 021 222 5780
(453)

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 17.08.2003 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.